குன்றத்தூர் 'கோரத்' தாண்டவம்!

திராவிடநாடு

மலர் 9 | 5-11-50 | இதழ் 20

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு

இரத்தம் சிந்திய படுகளம்

எட்டு முறை சுட்டுப் பொசுக்கினர்

இதயங் கொதிக்கும் அடக்குமுறை

'ஊருக்குள்ளேயும் நுழையக்கூடாது' என்று கூறிவிட்டனர் போலீசார்—ஐயோ, வயல்களிலே வேலை செய்துவிட்டு திரும்பி வந்த உழைப்பாளிகள் எங்கே செல்வர்? 'ஐயா, ஊருக்கு வெளியே தினமும் வந்து வயிற்றுப் பாட்டுக்கு வேலை செய்வோம்—திரும்புவோம்' என்று கெஞ்சினர். மன்றாடினர்; மண்டியிட்டனர்; தொழுதனர்; அழுதனர். கனத்த குரலில், கண்டிப்பான முறையில் 'முடியாது போங்கள், சேற்றிலே சகதியிலே படுத்துக் கிடவுங்கள்' என்று விரட்டினர்.

'அடுத்த கிராமம் ஐயா, வேறு வழி கிடையாது—இப்படித்தான் நுழைந்து போகவேண்டும்' என்றனர், கிராம மக்கள். அவர்கள் கோரச் சிரிப்பை வீசினர். புதுப் பாதை போட்டுப் போங்களேன், என்றனர். வந்தவர் தயங்கினர். அவர்களோ துப்பாக்கியை நீட்டினர்.

ஊருக்கு வெளியே, அதுவும் ஒருபுறம், இருபுறம் பட்டுமல்ல, எங்கெங்கு வழியுண்டோ அங்கெல்லாம் போலீஸ் படையினர் நின்றுகொண்டு, வெளியிலிருந்து வருபவர்களையெல்லாம் விரட்டியடித்துக்கொண்டிருந்தனர்.

ஊருக்குள்ளேயோ, சொல்லவும் முடியாத அளவு, எழுதவும் கை நடுங்குகிற அளவு கொடூரம், பயங்கரம் தலை விரித்தாடிற்று!

ஊர் சிறிய தென்றாலும், வந்திருந்த ஆட்சியாளரின் 'அதிகார அம்புகளின்' எண்ணிக்கை மிகப் பெரியது — காணவே நடுக்கந்தரக்கூடிய அளவு பெரியது!

தெரு முனைகளில், ஒவ்வொரு தெருவிலும் மூன்று நான்கு வீடுகளுக் கிடையில், கடை வீதியில், பொது இடங்களில் போக்கு வரத்து அதிகமுள்ள திருப்பங்களில் — எங்கெங்கும் போலீஸ், போலீஸ், போலீஸ் மயம்!

நிமிடத்திற் கொருமுறை மேலதிகாரிகளின் எச்சரிக்கை — உத்தரவுகள் — பறந்துகொண்டிருந்தன.

போலீஸ் லாரிகள் சுழன்றடிக்கும் சூறாவளியைப் போல பயங்கர இரைச்சலோடு ஊரை வட்டமிட்டவண்ணமே இருந்தன!

தெருக்களிலே மக்கள் நடமாடக்கூடாது என்று தடுத்தனர். அடுத்து இரண்டடி யெடுத்து வைத்துவிட்டால் அடி, உதை!

நாலைந்து பேர் கூடிச் சென்றால் அவர்களின் வாய் பேசாது—கை பேசும், தடிகள்தான் உத்தரவுகள் பிறப்பித்தவண்ண மிருக்கும்! வாங்கும் அடிகள், அதனால் வீங்கும் வீக்கங்கள்தான் கட்டளைகளை சொல்லும்!

திறந்து கிடந்த கடைகள் அரை மணிக்குள்ளாக மூடப்பட்டன. உணவுக் கடைகள் இருந்த இடந் தெரியவில்லை.

அடி, உதை, குத்து, வெட்டு என்ற அகங்காரக் குரல் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. ஐயோ, மண்டை உடைந்ததே!—கால் போயிற்றே! — கண்ணிழந்தேனே! — கை யொடிந்ததே!— என்ற பரிதாபக் குரல்களும் இடையிடையே! செவியுள்ளோர் எவரும் கண்ணீர் சிந்தாமலிருந்திருக்க மாட்டார்கள்.

ஆம், அவர்கள் அவதிக்குள்ளாக்கப்பட்டனர். அபாயத்திற்காளாயினர். ஆனால், அவர்கள் செய்த குற்றம் அவர்களுக்கும் தெரியாது, தண்டனை தந்த 'தடி தாங்கிகளுக்கும்' தெரியாது! ஆம், அவர்களுக்கு அடிக்கத்தான் தெரியும்—அதற்காகவே அவர்கள் இருக்கிறார்கள்—ஆகவே அடித்தார்கள், அடித்தார்கள் பரிதாபம் சிறிதும் இன்றி, பதை பதைப்பு துளியுமின்றி, அடிபட்டவர்கள் வீதியிலே பிணம் போலக் கிடப்பதைக் கண்டும் கவலையின்றி! ஆம், அவர்கள் அம்புகள்—அடிக்கச் சொன்ன அதிகாரிகள் வில்லின் தன்மையினர்! ஆனால் அதனை வளைத்து விட்டவர்களே, நம் கவனத்திற் குரியவர்கள் — அவர்கள்தான் எதேச்சாதிகார மதுவருந்தி, ஆணவ வெறியாட்டமாடும் காங்கிரஸ் சர்க்கார்!

தடியடியோடுமட்டும் அவர்கள் நிறுத்தவில்லை-அடக்குமுறையின் கடைசி எல்லையையும் கடந்துவிட்டனர்.

குண்டும் பேசிவிட்டது, 'ராமராஜ்யத்திலே!' துப்பாக்கியை ஏந்திவிட்டனர், அன்பால் உலகாண்ட அசோக, சக்கரக்கொடியினர்!

சுட்டனர், சுட்டனர், கடைசிவரை நிறுத்தவே இல்லை! ஏழுமுறை என்றதுகூட தவறு — எட்டு ரவுண்டுகள்! எங்கும் கேட்டிராத நிகழ்ச்சி —இதயமுள்ளவரே இரக்க சிந்தனையாளரே, கருணை மனம் படைத்தோரே, கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள்!

'ஐயோ, அம்மா என்று பதறிப்போடும்போது இடறி விழுந்தோர் எத்தனை, எத்தனை பேரோ, அறியோம்! வீறிட்டழுதிடும் குழந்தைகள், பதறிக்கதறிய தாய்மார்கள், இலட்சிய வெறியேறிய இயக்க இளஞ்சிங்கங்கள், அச்சத்தால் தாக்கப்பட்ட பொது மக்கள் — பதட்டம், பரபரப்பு, அவசரம், அச்சம், ஆவேசம் எல்லாம் தலைகால்புரியாமல், நர்த்தனமாடினர்.

அடிபட்டோர், மிதிபட்டோர், கையொடிந்தவர், காலிழந்தவர், மண்டை பிளக்கப்பட்டவர். எண்ணிச் சொல்லமுடியாது — குண்டுவெடி சப்தம் கேட்டதும் இத்தனை துயரங்களும் பறந்தோடின. இயக்கத்தவரின் துவண்ட இதயமும் நிமிர்ந்து நின்றது.

மூவர், பிணமென வீழ்ந்தனர். எட்டுமுறை சுட்டதில் மூவர் உயிருக்கு ஆபத்து வருமளவு அடிபட்டது! அவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாகக்கிடந்தனர். அவர்கள் ஆவி, சாவு மண்டலம் போய்த்தான் திரும்பிவந்தது! சாக்காட்டில் விளையாடுந்தோள்கள் என்று பாடிய பரம்பரையினர். உயிர் வெல்லமல்ல என்று ஊருக்கு உரைத்திடும் உத்தமர்கள் வழிவந்தவர். சாவைக்கண்டு சிரித்தவர்கள். ஆறிலும் சாவு நூறிலும் சாவு — அது ஒரு இலட்சிய வெற்றிக்காக இருப்பதால் அஞ்சாமல் ஏற்போம் என்ற வீரர் வழிவந்தோர் — ஆகவே அவர்கள் அஞ்சாத நெஞ்சைக் காட்டினர். சுட்டனர். குண்டுகள் பாய்ந்தன. புகை மண்டலத்திலே 'அந்தோ சாகிறேனும்' என்று கூறத்

துடிக்கும் உதடுகளைப் பிரிக்கவும் முடியாமல் வீழ்ந்தனர். அவர்கள் சாகவில்லை — உயிரோடுதான் இருக்கிறார்கள் — ஆனாலும் உயிரைக் காப்பாற்ற உன்னத இலட்சியத்தைவிடத் தயாராக இல்லை! சாவைக்கண்டு அவர்கள் அஞ்சவில்லை - சாவுதான் அவர்களைக்கண்டு அஞ்சி ஓடிவிட்டது!

இந்த நிகழ்ச்சிக் குறிப்புகள் எங்கு நடந்தன என்று கேட்கிறீர்களா? கொரியா போராட்ட ஒரு நாள் வருணனையல்ல—நீயத் படையெடுப்பின் நிகழ்ச்சிச் சித்திரமல்ல—அகிம்சாமூர்த்தி காந்தி அண்ணலின் வழிவந்தவர்கள் ஆட்சியிலே உள்ள குன்றத்தூர் என்ற சிற்றூரிலே நடந்தது இது!

பேச்சுரிமைக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினர், 144 தடையுத்தரவை மீறிடத் திட்டமிட்டனர் — அறவழியில், முறையும், கட்டுப்பாடும் கைகோர்த்து நிற்கும் வகையில்!

சென்ற 26—10—50ல்தான் இந்தக்கோரப் போராட்டம்!

ஆண்டிடும் பொறுப்பிலே அமர்ந்துள்ளோர் அக்கிரம வழிநடந்து 'அப்பாவி' மக்களை கொடுமைக்குள்ளாக்கினர் அன்று!

ஆம், குன்றத்தூரில்தான் இந்தக்கொடுமை!

குன்றத்தூர் எதிர்கால திராவிட சரித்திரத்திலே குருதியால் குறிப்பிடப்படும் இடமாகிவிட்டது' வரலாற்றிலே வரும் இரத்தத்தடாகம் — கண்ணீர்ப் பெருவெள்ளம் அது! அந்த பிணவாடை வீசும், நிச்சயம்!

கோலேந்திய காங்கிரஸ் கனம்கள் 'பேயாட்டம்' போட்ட மயானபூமியாக்கப்பட்டுவிட்டது அது!

அந்த பேச்சுரிமைக்கு சமாதிகட்டினர்-அத்தோடு நிறுத்தினரா? இல்லை, இல்லை—அதற்கு இரத்தாபிஷேகம் செய்தனர். அதுமட்டுமா? எலும்புப் பொங்கலிட்டுப் படைத்தனர், 'என்று தணியும் சுதந்திரதாகம், என்று மடியும் அடிமையின் மோகம்' என்று நோன்புடைய காங்கிரஸ் கத்திய கனவான்கள்!

குன்றத்தூர், 'அகிம்சா' ஆட்சியாளரின் அநியாய அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களுக்கு குன்றேறி நின்று சான்று பகரும்!

சென்ற வாரம் குன்றத்தூர் குண்டுவீச்சுபற்றிக் குறிப்புகள் தரப்பட்டிருந்தன. கருத்துடையோர் அனைவரும் கண்டு கண்ணீர் சிந்தியிருப்பர். ஆத்திரக்காரர் தினவெடுக்கும் தோள்களைத்தட்டியிருப்பர். 'ஆகா, ஆகுமா' என்று துடித்தெழுந்திருப்பர். ஆழ்ந்த சிந்தனையாளர் மட்டுமே சிரிப்பர்! ஏன்? ஆபத்திலே சிக்கிக்கொண்டு அழிவை அணைத்துக்கொள்ளப்போகும் நிலையிலிருப்பவர்

(8-ம் பக்கம் பார்க்க)

அதிகாரிகள்-ஒரு ஆட்சியின் ஜீவ நரம்புகள். காங்கிரசாட்சியில் அவர்கள் படும் அல்லல், ஏராளம். எடுத்ததற்கெல்லாம் மிரட்டல்! 'மாற்றுவேன்' என்ற பயமுறுத்தல்!

'எம். எல். ஏ.'க்களும் காங்கிரஸ் பிரமுகர்களும் அவர்களைப் படுத்தும்பாடு கொஞ்சமல்ல. எதிர்க்கட்சிகள்மீது அவர்களை ஏவிவிடுவதே, இன்றைய காங்கிரஸ் கட்சியினரின் போக்காகிவிட்டது. இந்தப் போக்கால் நாடு கெடும்! நல்லாட்சி கெடும்!! நல்லோரே-பொதுமக்களே, நீங்களே கூறுங்கள்,

இதுதானு சுயராஜ்யம்!

சென்னை தடியடி தர்பார்: கோட்டை ஸ்டேஷனருகில் ஒரு காட்சி. ஆயுதந் தாங்கிய போலீசார், இரும்பு முள் வேலியைத் தாண்டி, ஆவேசத்தோடு ஓடி வருவதைப் பாருங்கள்!

பேச்சுரிமை காத்திடப் பின்வாங்கோம்

எழுத்துரிமைப் போருக்கும் திட்டம்

தி. மு. க. செயற்குழு முடிவுகள்

உறுப்பினர்களின் உணர்ச்சி ஆவேசம்

எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவைகளுக்காக ஜனநாயகரீதியில் போராடுவதென திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற் குழு முடிவு செய்துள்ளது. நீண்ட ஆலோசனைக்குப்பின் செய்யப்பட்ட இம் முடிவை அறிவித்தபோது, எல்லோரும் பலமான கைதட்டுதல்களினூடே வரவேற்றனர்.

23—10—50- திங்கள் இரவு 9–மணிக்கு சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள திராவிட முன்னேற்றக் கழக தலைமை நிலையத்தில் மேற்படி செயற்குழு கூடியது. இரவு நெடுநேரம் ஆகியிருந்துங்கூட, செயற்குழுவின் முடிவுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமிகுதியால் ஏராளமான கழகத்தோழர்கள் கழகத்தலைமை நிலைய வாயிலில் குழுமிக்கிடந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

செயற்குழுவின் முடிவுகளை நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் வெளியூர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான கழக முன்னணி வீரர்கள் வந்திருந்தனர்.

கழகப் பிரச்சாரக்குழு உறுப்பினரும், பத்திரிகை நிருபர்களும், நமதியக்க பத்திரிகை ஆசிரியர்களும் செயற்குழுவின் தீர்மானங்களை அறியும் ஆவலோடு இரவு மணி-11 வரையில் காத்துக்கிடந்தது—வளரும் நம் கழகத்தின் முடிவுகளில் காட்டப்படும் அக்கரைக்கோர் எடுத்துக்காட்டு.

23—10—50 திங்கள் இரவு 9 மணிக்குக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற் குழு கூட்டத்தில், கீழ்க்கண்ட உறுப்பினர்கள், வந்து கலந்து கொண்டனர்.

(1) சி. என். அண்ணாதுரை (பொதுச் செயலாளர்)
(2) இரா. நெடுஞ்செழியன் (பிரச்சாரக் குழு செயலாளர்)
(3) காஞ்சி. மணிமொழியார் (நிதிக் குழு செயலாளர்)
(4) கே. எ. மதியழகன் (சட்ட திட்டக் குழு செயலாளர்)
(5) என். வி. நடராசன் (அமைப்புக் குழு செயலாளர்)
(6) சத்தியவாணி முத்து
(7) கோயில்பட்டி ஈ. வே. அ. வள்ளிமுத்து
(8) மதுரை எஸ். முத்து
(9) அம்பில் தர்மலிங்கம்
(10) பேளுக்குறிச்சி ஜி. பி. சோமசுந்தரம்
(11) முல்லை எம். பி. வடிவேலு
(12) ஈ. வே. கி. சம்பத்
(13) குமார. தணிகாசலம்
(14) குறிஞ்சிப்பாடி சாம்பசிவம்
(15) எம். எஸ். எம். மொகைதீன்
(16) கே. எம். கண்ணபிரான்
(17) பெ. மா. அப்பாதுரை
(18) டி. எம். பார்த்தசாரதி

தனி — அனுமதியின் பேரில் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக "திராவிட நாடு" தோழர் அரங்கண்ணலும் அனுமதிக்கப்பட்டார்.

ஆளவந்தாரின் நடவடிக்கைகள் குறித்து, வீர உணர்ச்சியோடு ஒவ்வொரு உறுப்பினரும், தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து பேசியபோது, "அடங்கியே போய்க் கொண்டிருப்பது இனியும் ஆகாது. வீணாக நம்மை அடக்கிவிட இந்த அரசாங்கம் மனப்பால் குடித்து, தலைவிரித்தாடினால் நாம் அதைச் சகித்துக் கொண்டேயிருப்பதா?" என்று கேட்டனர்.

நீண்டநேரம் நாட்டு நிலைமை குறித்தும், நமது கழக நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் விவாதிக்கப்பட்டன.

கழகத்துக்கு நாட்டில் ஏற்பட்டுவரும் செல்வாக்கையும், மக்கள் மன்றத்தில் நமக்கு ஏற்பட்டுவரும் ஆதரவையும் பொதுச் செயலாளர், பெருமிதத்தோடு வெளியிட்டார். "இவ்வளவு வளர்ச்சியும் நமக்கு புதுப் புது பொறுப்புகளைச் சுமத்துகின்றன. பொறுப்புகள் வளர்ந்தாலும்—அவைகளைச் சிரமேல் தாங்கி, சீர்வகையில் அவைகளை நாம் நிறைவேற்றுவோம்" என்றும், பொதுச் செயலாளர் உற்சாகத்தோடு, கூறினர்.

பிறகு, ஓரே மனதாக, பலத்த கைதட்டுதல்களுக்கிடையே பின்வரும், இரு, தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★ 1. (அ) திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களுக்கோ, அல்லது தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ கி. பு. கோ. 144-வது தடையுத்தரவு அல்லது சென்னையில் நகர போலீஸ் சட்டத்தின்கீழ் தடையுத்தரவு, பேச்சுரிமையைப் பறிக்கும் விதத்தில் அரசியலாரால் பிறப்பிக்கப்படுமானல் அந்தத் தடையுத்திரவுகளை, மீறி, பேச்சுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று இக்கூட்டம் முடிவு செய்கிறது.

(ஆ) மேற்படி தடை உத்தரவை மீறுவதற்குத் தலைமை நிலையத்தின் முன் அனுமதி பெறத் தேவையில்லை என்று எல்லாக் கிளைக் கழகங்களுக்கும், இக்கூட்டம் அறிவித்துக் கொள்கிறது.

★ 2. தடை செய்யப்பட்ட நாடகங்களை மீறி நடத்த ஒவ்வொரு மாவட்டமும் திட்டம் வகுத்து நடிகர் குழு அமைத்து, தலைமை நிலையத்துக்கு நவம்பர் இறுதிக்குள் தெரியப்படுத்த வேண்டுமென்று இச்செயற் குழு, மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்கிறது.

மேற்படி இரு தீர்மானங்கள் நிறைவேற்றிய பின் பொதுச் செயலாளர் பேசுகையில் இரயில்வே நிலையப் போர்டுகளில் உள்ள இந்திப் பெயர்களை மாற்றி முதலில் தமிழுக்கு இடம் தர வேண்டுமென்று கோயில்பட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி தான்சம்பந்தப்பட்ட இரயில்வே அதிகாரிகளுக்கு கடிதம் தீட்டியிருப்பதாகவும், அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

பிறகு, கழக சம்பந்தமான பல அலுவல்கள் குறித்து, மாவட்டச் செயலாளர்களுடன் கலந்தாலோசித்த பின், கூட்டம், முடிவுற்றது.

(நிருபர்)

வடநாட்டு மார்வாடிக்கடை மறியல்

திராவிடகழகப் பணி—50 வீரர்கள் கைது

இலட்சிய முரசொலி

"வடநாடு—நம்மைச் சுரண்டுகிறது, நம்மை நாயினும் கேடாக மதிக்கின்றது. நலிந்து சாகிறோம். இதைச்சகிக்க நாதியற்ற நடைப்பிணங்களா நாங்கள்? இன்பத் திராவிடத்தார் 'எச்சில் இலைகளுக்கு' ஏங்கும் இழிநிலையா?' என்று நாட்டில் பொங்கி எழும், வேக உணர்ச்சி தினசரி சென்னை சைனுபஜாரில் திராவிட கழகத் தொண்டர்கள், ஆர்வத்தோடு நடத்திவரும் வடநாட்டுத் துணிக்கடை-உணவுக்கடை மறியலில் காட்சி தருகிறது!

'வடநாட்டுச் சுரண்டல் ஒழிக!' 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்ற வீரமுழக்கத்துடன் தினசரி, தொண்டர் சியங்கள் அங்கு மறியல் நடத்தி வருகின்றனர்.

இலட்சிய வெறியின் தூதுவர்கள் அவர்கள்! 'அடைவோம் திராவிடம்' என்ற ஆர்வத்தின் சின்னங்கள்!

எதிர்கால திராவிடத்தின் தியாகச்சியங்கள்! அவர்களைக் கொண்டுபோய் 'காராக்கிரகத்தில்' தள்ளியவண்ணமே இருக்கிறது, அகிம்சா ஆட்சி. இன்றுவரை (30—10—50) ஐம்பது வெற்றிக் காளைகள், கொண்டுபோய்ப் பூட்டப்பட்டுள்ளனர். மறியல் தளபதியான வேலூர் தோழர் ஏ. பி, சனர்த்தனம் எம். ஏவும் சிறைக்குள்ளே கிடக்கிறார். கைது செய்யப்பட்டோர்மீது போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததாக, நகரப் போலீசால் 71வது பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

வடநாட்டு எதேச்சாதிகாரத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதே திராவிடர் கழகம் கூறுவதும், திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவதும் ஆகும். இன்பத் திராவிடம் துன்பக் கடலாவதைச் சகிக்க முடியாததன் விளைவுதான்—மறியல்.

மறியல் செய்வது—ஜனநாயகம் அனுமதிக்கும் முறை.

ஆனால், இந்த ஆளவந்தார்களுக்கு அது பிடிக்கவில்லை. முறைக்கிறார்கள்! வெறி பிடித்தவர் போல காங்கிரஸ் காமராஜர் கர்ச்சிக்கிறார்! விளைவு—அதிகார அம்புகள், நமது அரும் தொண்டர் மணிகளை, சிறைக்குள் பூட்டியும் சிதைத்தும் சித்திரவதை செய்கிறார்கள்!

உரிமைக் கோரிக்கை—வெறும் நிலவுப் பிரயாணமல்ல. இதை, அடக்குமுறைப் பாதையில் உருளும் ஆளவந்தார் அறியவேண்டும்.

இலட்சிய வெற்றியை மனதில் வைத்து, தளராது, தொண்டாற்றுகிறார்கள் திராவிடர் கழகத் தொண்டர்கள்.

வடநாட்டு மார்வாடிக் கடை மறியலுக்காக, சென்னையிலிருந்து மட்டுமின்றி வெளியூர்களிலிருந்தெல்லாம் தொண்டர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்!

ஆகவே, 'இதுகளால் என்ன முடியும்?' என்று பேசும் காங்கிரஸ் கனம்களின் கனவு பலிக்காது: தொடர்ந்து, எடுத்த பணியை முடிக்கவே செய்வார்கள் இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள்!

தினசரி நடைபெறும் மறியலை ஆயிரக் கணக்கான மக்கள் காண்கிறார்கள். அவர்கள் இதயமெல்லாம், திராவிடரியக்கக் கொள்கைகள் பரவி வருகின்றன. காங்கிரஸ் ஆட்சியினர் போலீசார் மூலம் நடாத்தும், 'அகிம்சா ஆட்சி' முறையின் கேவலமும் பரவி வருகின்றன.

'விடுதலை' ஆசிரியர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ (குத்தூசி) யும், இன்னும் பிறரும், தினசரி மறியலைக் கண்காணித்து நடத்தி வருகின்றனர்.

கடமைக்காகப் பணி புரிந்து "சிறைச்சாலை என்ன செய்யும்?" என்று வீர முழக்கமிட்ட வண்ணம், மறியல் தொண்டர்கள், இலட்சிய வெற்றிக்காகப் போராடுவது காண—நமது இதயமெல்லாம் பூரிக்கிறது. அறப்போர் நிகழ்ச்சிகளை, உடனுக்குடனே விரிவாகத் தெரியப்படுத்த 'தினசரி' இல்லையேயென, ஏங்குகிறோம்.

எனினும், ஒரு நல்ல இலட்சியத்துக்காகப் போராடும் வீரர்களையெல்லாம் வாழ்த்துகிறோம். குடும்பக் கவலை மறந்து, இலட்சியப் புறாக்களாய் உலவும் அவர்கள், எதிர்காலத்தின் வெற்றிச் சித்திரங்கள்.

வாழ்க அவர்கள்! வளர்க உரிமை வேட்கை!!

குன்றத்தூர் குண்டுமாரி!

அடக்குமுறையின் உச்ச கட்டம்

"பகிரங்க விசாரணை நடத்துக"

தொழிற்சங்க காங்கிரஸ் கண்டனம்

26—10—50 மாலை சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நடைபெற்ற பொதுகூட்டத்தில், மிருகத்தனமான முறையில் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளதை சென்னை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

கூட்டம் கூடும் உரிமையை ஸ்தாபிப்பதற்காக, மக்களின் நியாயமான பிரஜா உரிமையை நிலைநாட்டுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மக்கள் முயற்சி செய்தனர். கூட்டம் கூடும் சாதாரண உரிமையைக்கூட பலாத்காரமாக பறிக்க முற்படுகிறார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்! பிரஜா உரிமைபற்றி வாய்கிழியப்பேசும் அதேசமயத்தில் மாகாணம் பூராவிலும் 144 செக்ஷன் தொடர்ந்து ஆட்சி செலுத்திவர அனுமதிக்கும் காங்கிரஸ் ஆட்சியாளர்களும், அவர்களின் அடக்குமுறை இயந்திரங்களும் எவ்வளவு மூர்க்கத்தனமான முறையில் இறங்கி வருகின்றன என்பதை குன்றத்தூரில நடந்த கொடூர துப்பாக்கிப் பிரயோகம் எடுத்துக் காட்டுகிறது. கடந்த $2\frac{3}{4}$ வருடங்களாக மக்களின்மீதும், உரிமைகளுக்காகப் போராடும் உழைப்பாளிகள்மீதும், அவர்கள் கட்சிகளின்மீதும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பேயாட்டம் ஆடிவருவதை அறிந்தவர்கள் இந்த துப்பாக்கிப்பிரயோகத்தின் உண்மை தன்மையை அறிந்துகொள்ளமுடியும். பல்லவி பாடுவதுபோல. சர்க்கார் 'மக்கள் கல்விசினர்,' அதை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்று மானங்கெட்டமுறையில் பேசுவதை மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் வெறுப்புடன் ஆட்சேபிக்கிறது.

சுமார் 3000க்கு மேற்பட்ட பொதுமக்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினது மட்டுமின்றி, காட்டுமிராண்டித்தனமாக 8 தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்து 3 பேருக்கு பலத்தக் குண்டுக் காயம் ஏற்படுத்தி, 19 பேர்களை கைது செய்துள்ளனர். இதிலும் வெறி அடங்காமல், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, வெளியில் யார் வந்தாலும் அவர்களை அடித்து சித்ரவதை செய்கின்றனர். மக்களின் மீது இத்தகைய அடக்குமுறையை ஏவிவிட்டு, கண்மூடித்தனமாக தாக்கியுள்ளதைக் கேட்டு செ. மா. தொ. ச. காங்கிரஸ் வெஞ்சினம் கொள்வதோடு, மாகாண தொழிலாளி வர்க்கத்தின் சார்பாக இதைக் கண்டித்து, இதுபற்றி பகிரங்க விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தண்டிப்பதோடு, கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும், காயம்பட்டவர்களுக்கு திறமையான வைத்திய உதவி அளிக்க வேண்டுமென்றும்கேட்டுக்கொள்ளுகிறது.

ஜனநாயக உரிமைகளுக்கும்—பிரஜா உரிமைகளுக்காகவும் போராடும் சகல ஜனநாயக வாதிகளையும், ஸ்தாபனங்களையும் இந்தக் கொடுமையைப் பற்றி தங்கள் ஒன்றுபட்ட கண்டனக் குரலை எழுப்புமாறு சென்னை மாகாணத் தொழிற் சங்க காங்கிரஸ் அறைகூவி அழைக்கிறது."

—✲—

ஆதிக்க நினைவு அழிந்தே தீரும்!

கோவிந்தசாமி கண்டனம்

சென்னை மாவட்ட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி, ஆளவந்தார் கொடுமைகள் குறித்து, தோழர்களுக்கு அறிவிக்கும் செய்தி:

'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பது ஓர் சமூக சீர்திருத்த இயக்கம். சமூகத்திலே இருக்கின்ற குற்றம் குறைபாடுகள், சமூகத்தைப் பாதிக்கின்ற அரசியல், பொருளாதாரசீர்கேடுகள், இவைகளை மக்களுக்கும், மக்களை ஆளுகின்ற குழுவினருக்கும் எடுத்து விளக்கி திருத்தம் காணுவதற்கும், சமூகத்தின் வாழ்வு செம்மையுறச் செய்யவுமே நாட்டிலே பணியாற்றி வருகின்றது. நாகரீக நாடுகளில் இத்தகைய சீர்திருத்த இயக்கங்களை ஆளுகின்ற கட்சியாரும், அதற்கு எதிர்க் கட்சியாரும் பேணி வளர்த்து வருவதோடு, சலுகைகள் பல தந்து நன்கு மதித்தும் வருகின்றனர். சீர்கேட்ட உருவாயமைந்த நாடாகவே இந்நாடு விளங்குவதால், சீர்திருத்தத்திற்கு இந்நாட்டில இடமே இல்லை. பட்டவர்த்தனமாக நாட்டின் குறைபாடுகளை எடுத்துச் சொன்னால், அவர்கள் தேசத் துரோகிகள் என சித்தரிக்கப்படுகின்றனர்.

ஆளுகின்ற கட்சிக்கு பலம் பொருந்திய எதிர்க்கட்சி இல்லாத காரணத்தினால், நாட்டிலே நன்மதிப்பும் மக்களுடைய பேராதரவும் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற சமூக சீர்திருத்த இயக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஒருக்கால் தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொண்டு திடீரென நாட்டின் ஆட்சியையும் கைப்பற்றிக் கொள்ளுமோ என்ற அச்சமும், சபலமும் இன்றைய ஆட்சியாளருக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இந்த கழகத்தை ஒழித்துவிட வேண்டுமென்றே முனைகின்றனர். இக்கழகம் ஒவ்வொரு திராவிடனது உள்ளத்திலும் குடிகொண்டு விட்டது என்பதை அவர்கள் உணரவில்லை.

சமுதாய பழக்க வழக்கத்திலும், கலாச்சாரத்திலும், மொழியிலும் மாறுபட்ட வடவருடைய நட்பை இக்கழகத்தார் புறக்கணிக்கவில்லை. அவர்களுடைய ஆதிக்கம் இந்நாட்டை வறுமைக்குள்ளாக்குகின்றது என்ற ஒரே காரணத்திற்காக திராவிடம் தனியே பிரிந்துதான் தீரவேண்டும் என்று சொல்லுகின்றது.

பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லாத இக்கழகம், இரகசிய முடிவுகளையும், சதிச் செயல்களையும் கண்டறியா இக்கழகம், தனது குறிக்கோளிலே வெற்றியைக் காணுவதற்கு அமைதியான முறையிலே, சட்ட சம்மதமான போராட்டங்களையே நடத்தி வந்துள்ளது. இக்கழகத்தின் தாய்க் கழகங்களிலிருந்து இன்றுவரை இவ்வியக்கம் ஒரு தனி மனிதனுக்குக்கூட ஆபத்து உண்டாக்கியதில்லை என்பதை உலகமே சாட்சி சொல்லும். இக்கழகத்தின் பொறுப்பும், கண்ணியமும் இவ்வாறிருக்க, சென்ற 24-ந் தேதி, மத்திய சர்க்கார் மந்திரி கனம் ஆச்சாரியார் சென்னை வந்துற்றபோது, வடநாட்டு ஆதிக்க ஆட்சியை இந்நாட்டு மக்கள் விரும்பவில்லை என்று தெரிவிக்கின்ற அறிகுறியாக சட்டரீதியாக நாகரீக நாடுகளிலே நடப்பதைப் போன்று கருப்புக் கொடிகளைக் காட்டவந்த திராவிடப் பெருங்குடி மக்களை இந்நாட்டு ஆட்சியாளர் தடியால் அடித்து, கொடுமைகள் பல செய்து, மண்ணிலே குருதியைக் கொட்டச் செய்திருக்கின்றனர். இது நீதியா? தர்மமா? மனித உள்ளம் படைத்த மந்திரிமார்களே, நாங்கள் உங்களுக்கிழைத்த கொடுமைகள்தான் என்ன?

குன்றத்தூரிலே 26-ம் தேதி, பேச்சாளருக்காகத்தானே வாதாடினார்கள். இக்கழகத்தார் அச்சிற்றூரிலே பேசிவிட்டால் என்ன, பிரளயமா வந்துவிடும். வாய்ப்பூட்டுச் சட்டம் ஏன்? ஊரடங்குச் சட்டம் ஏன்? நூற்றுக்கணக்கான தமிழன்பர்களை ஏன் தடிகொண்டு தாக்கினீர்கள்? காட்டிலே மேயும் வேட்டைப் புலுக்கள் என்று கருதியா? மூன்று தன்மானத் திராவிடர்களை துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கச்செய்தீர்கள்? இம்முறை வேண்டாம், இனி வேண்டவே வேண்டாம்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, திராவிடப் பெருங்குடி மக்களே!! பதறவேண்டாம். பொறுமை வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும். அன்பைக்கொண்டு ஆயுதத்தை வென்றுவிட முடியும். கட்டுப்பாடும், உள்ளத்திலே உறுதியும் வேண்டும். வெற்றி நமதே. [illegible]

கோவையில் நிதியளிப்பு விழா

கட்டிட நிதிக்கு ரூ. 4,000

மாநகர் கண்டிரா மக்கள்

மகத்தான பொது வரவேற்பு

22—10—50 கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டம், தமிழகத்தின் வரலாற்றிலேயே ஒரு சிறப்பான கூட்டமாகும். எந்த அரசியல் கட்சிக்கும், இதுவரை, கூடாத அளவு லட்சக் கணக்கில் மக்கள் 'வெள்ளம்' கரை புரண்டு கிடந்தது.

கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நடைபெற்ற தலைமைக் கழக கட்டிட நிதி அளிப்பு விழாவையொட்டி நடைபெற்ற அம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரையும் கலந்துகொண்டார்.

மேற்படி கூட்டத்துக்கு பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி தலைமை தாங்கி, கோவை மாவட்டத்தின் சார்பில் ரூ 4000 கொண்ட பணமுடிப்பொன்றை பொதுச் செயலாளர் அண்ணாதுரையிடம் அளித்தார்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டின் மூலம் கிடைத்த ரூ 2251ம், டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி, பி. பழனிச்சாமி ஆகியோர் நன்கொடையாகத் தந்த ரூ 750ம் கணியூரில் நடைபெற்ற மாவட்ட தி. மு. க. மாநாட்டின் மீதித் தொகையில் ரூ 1000ம் கொண்டதே, இந்த ரூபாய் நாலாயிரமுமாகும்.

மேற்படி தொகையை பொதுச் செயலாளரிடம் தந்து, தலைமைக் கழகத்தின் கட்டளையை எப்போதும் நிறைவேற்ற கோவை மாவட்டம் முன்னிற்குமென்று கழக வீரர்களின் முதல் தொண்டன் என்றளவில், தாம் உறுதிமொழி தருவதாக வெளியிட்டார்.

பிறகு தோழர் ஈ. வி. கே. சம்பத், 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன், திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

ஆளவந்தார் அடக்குமுறைக்கு ஆளாகி சிறை சென்று மீண்ட பொதுச் செயலாளரைப் பாராட்டும் முகத்தான் பல கிளைக் கழகங்கள் சார்பிலும், மாணவர்கள் சார்பிலும் ஏராளமான மலர் மாலைகள் அணிவித்தனர்.

கடைசியில் பொதுச் செயலாளர் பேசுகையில், கோவை மாவட்டக் கழக வீரர்களைப் பாராட்டினார். காங்கிரஸ் ஆட்சியின் போக்கு குறித்தும், கழகத்தின் இலட்சியம் குறித்தும், விளக்கிப் பேசினார்.

இந்த நிதியளிப்பு — பாராட்டுக் கூட்டம், கோவை மாவட்ட வரலாற்றிலேயே ஒரு சிறப்பு பெற்றுவிட்டது. இத்தகைய அளவில், மக்கள் மன்றத்தில் நமது கொள்கைகளை வளர்த்து வரும் கோவைத் தோழர்கள், நாட்டின் பாராட்டுதலுக்குரியவர்கள். வாழ்க நமது வீரர்கள்!

(நிருபர்)

—X—

திராவிட நாடு

ஞாயிறு] 5–11–50 [காஞ்சி

தூண்டுகிறார்!

"நான் சித்திரவதை செய்யப்படுகிறேன்! சிதைத்து, சின்னபின்னமாக்கி என்னை வதைக்கிறார்கள்! வாட்டுகிறார்கள்! எலும்பெல்லாம் நொருங்கிவிட்டன — உடம்பெல்லாம் வீங்கிவிட்டது—தள்ளாடுகிறேன்! கடுமையான ஜன்னி—படுக்கையிலே நாதியற்றவன் போல கிடத்தப்பட்டிருக்கிறேன்! என் உயிர் 'ஊசி முனை'யிலே ஒட்டிக்கொண்டிருக்கிறது. வாழத்தான் பிறந்தேன்! ஆனால் என் வாழ்வு, இவ்வளவு சீக்கிரம் சித்திரவதைக்குள்ளாகி சிதைக்கப்படும் என்று நான் கனவிலும் கருதவில்லை—நினைத்தது கூட இல்லை. நினைக்காதது நடக்கிறது. நடைப்பிணம் என்று சொல்வார்களே அந்தக் கட்டத்தையும் தாண்டிவிட்டேன். இனி நான் பிணம்! ஆமாம், அடுத்தது முடிவுதான்!! அந்த நிலைக்கு, எனது வாழ்க்கை முடியடிக்கப்பட்டுவிட்டது. நான் மலர் — ஆனால் சருகாகிவிட்டேன்! எனது இதழ்கள், பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டு மிதித்து துவைக்கப்பட்டுவிட்டன! ஆனாலும் என் இதயத்திலே எழும்பிய தாகம் இன்னும் அடங்கவில்லை. என் மூச்சு ஒடுங்க ஒடுங்க, அது எழும்பி எழும்பி அடிக்கிறது! என் வாழ்நாளுக்குள்ளே நான் எடுத்த காரியம் வெற்றி பெற்றுவிடும் என்றே நம்பினேன்—உலவினேன் — [illegible] உழைத்தேன். என் நம்பிக்கை நாசமாகவில்லை—ஆனால் நான் நாசமாகிவிட்டேன்! என் வாழ்வு பலாத்காரமாக இந்த உலகிலிருந்து பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. என் தாய் தந்தையரைக் கண்டு எவ்வளவோ ஆண்டுகளாகிவிட்டன. என் அருமை மனைவியின் மதுர மொழியைக் கேட்டு மகிழ்ந்த காலம் போய்விட்டது. ஆசைக் குழந்தைகள் 'அப்பா! அப்பா!!' என்றழைத்த அன்புக் குரல், இதோ என் காதுகளில் ரீங்காரமிட்ட வண்ணமுள்ளன. எனது அருமைத் தோழர்கள் என்னைச் சுற்றி வட்டமிட்ட காட்சி, நாள்தோறும் நான் பொதுமேடையில் நின்று முழக்கமிட்ட நிகழ்ச்சி, மக்கள் என் கொள்கையைக் கேட்டு எழுப்பிய ஆரவாரம், இவையெல்லாம் மரணப் படுக்கையில் கிடக்கும் என்னை மகிழ்விக்கின்றன. ஒரு குற்றமும் செய்தவனல்ல! திருடனல்ல, கொலைகாரனல்ல,—தேய்ந்த சமுதாயத்துக்காகப் பாடுபட்டவன்! அதற்குப் பரிசு—எனக்கு மரணப் படுக்கை! மக்கள் தந்தது அல்ல இந்தப் பரிசு—அவர்கள் நான் நாட்டிலே உலவியபோது மலர் மாலைகளையும், மகிழ்ச்சி வாழ்த்துகளையும் தந்தனர். நான் கூறிய கொள்கைகளைக் கேட்டு மகிழ்ந்தனர். அவர்கள் தந்த பரிசல்ல இது. என்னைப் பிடிக்காது, நான் கூறிய கொள்கைகளை வெறுத்து, மக்கள் என்மீது பாய்ந்து என்னை மரணப் படுக்கையில் போட்டிருந்தால்......மகிழ்ந்திருப்பேன்! 'பொல்லாது செய்தோம் போலும்-பொதுமக்களுக்குப் பிடிக்கவில்லை' என்று, நிம்மதியோடு, என் வாழ்வை முடித்துக்கொள்வேன். ஆனால் மக்கள் என்னை மாவீரன் என்று வாழ்த்துகின்றனர்—நானோ மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டேன்! மக்கள் அல்ல என்னை மரணக் குழியில் போடுவது—அரசாங்கம்! ஆமாம், அரசாங்கம்தான் அன்பர்களே அரசாங்கம்தான்!!

'தடியா' என்று அழைத்தனர்—புன்சிரிப்போடு சென்றேன்! தடியால் தாக்கினர்—தாங்கிக் கொண்டேன்! தள்ளி உதைத்தனர்—நான் ஆத்திரப்படவில்லை! துப்பாக்கி முனையில் நிறுத்தினர்—நான் துயரமடையவில்லை! சுட்டனர்—'ஐயோ' என்றலறவில்லை, 'அடைவோம், திராவிடம்' என்று கூறிக்கொண்டே வீழ்ந்தேன்! அவர்கள் சித்திரவதையைக் கண்டு நான் சித்தம் கலங்கவில்லை 'இலட்சிய வெற்றிக்கு' நாம் தரும் பரிசுகள் என்றே கருதினேன்! இன்று, இதோ, நான் கிடக்கிறேன் மரணப் படுக்கையில்! என் உயிர் ஊசலாட, அதைக் கண்டு மகிழ்ந்து நிற்கின்றனர் ஆளவந்தார்!

நான் என் வீட்டுக்காக அல்ல பாடுபட்டது. என் எலும்புகள் முறிந்தது நான் என் சுயநலத்திற்காக அல்ல. நரம்புகள் அறுந்து வீழ, குண்டுகள் உடலைத் துளைக்க, குருதி மண்ணிலே தெறிக்க—நான் வீழ்ந்தது, கொடுஞ்செயல் புரிந்த போது அல்ல!

நாட்டுக்குப் பணியாற்றினேன்—அதற்குப் பரிசு, இது!

பொதுப் பணி புரிந்தேன்—அதற்கு அதிகார வர்க்கம் தரும், வெகுமதி இது!

மக்கள் வாழ்வுக்காகப் பாடுபட்டேன் — மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டேன்!!

★

இந்தக் காட்சியைக் காண விரும்புகிறார். நாட்டிலுள்ளோரிடமிருந்து இத்தகைய "மரண கீதத்தை" எதிர்பார்க்கிறார். 'தயாரித்துக் கொள்ளுங்கள்' 'தர்பார் நடத்தப் போகிறேன்' என்று, நம்மை நோக்கி அறைகூவல் விடுக்கின்றார்.

வீர மரபினரே! வீழ்ந்த இனத்தின் வெற்றிச் செல்வங்களே! நாட்டு வாழ்வுக்காகப் பணியாற்றும் நல்லுத்தமர்களே! நாவால், செயலால், நாட்டுக் குழைக்கும் நல்லிளங் காளைகளே! எழுத்தின் சிற்பிகளே! இளங் கவிஞர்களே! பேச்சின் பிம்பங்களே! பழம் பெருமையின் விடிவெள்ளிகளே! தமிழ்ப் பேச்சினரே! வீர மூச்சினரே!

நம்மைத்தான், "மரணகீதம்" தயாரிக்கச் சொல்கிறார்! நம் வீரத்தைக் கேலி பேசி—விலாவிலே குத்துகிறார்!! தடியடியும், துப்பாக்கியும் நம்மீது பாய வேண்டுமாம்—சொல்கிறார்! தூண்டிவிடுகிறார்—துணிந்து செய்கிறார்!!

நம்மை விட்டு வைக்கக் கூடாதாம்!

நாம் நாட்டிலே உலவுவது தகாதாம்!

நமது தொண்டு—விபரீதமாம்!!

நாம் அடக்கப்பட வேண்டுமாம்!!!

கூறுகிறார், கொஞ்சங்கூட மனிதாபிமானமில்லாது கூறுகிறார்!

கொடுவாள் பாய்ந்து, இரத்தம் வழிந்து, எல்லோரும் கதற மரணப் படுக்கையில் கிடப்பவனைக் கண்டு—கல்லும் உருகுமாம்! காடும் கதறுமாம்!!

சென்னைத் தடியடிக்கு ஆளாகி, குன்றத்தூர் குண்டுமாரிக்கு இலக்காகி, குண்டுகள் உடலையும் உள்ளத்தையும் துளைக்க, 'ஐயோ, முறையோ' என குடும்பத்தோர் கூவிக்கிடக்க, கொடுமைக்காளாகி நிற்கும் நம்மைப்பார்த்து-கேலி பேசுகிறார்! 'விடாதே-உதை' என்று தூண்டிவிடுகிறார்! வெங்கொடுமைக்காளாகி, வேங்கைகளுக்கு இரையாகிக் கிடப்பவன்மீது-'மீண்டும் பாய்ந்து பிடுங்கு! விடாதே பிடுங்கு' என்று வேங்கைகளை பாயத் தூண்டுகிறார்! நாம் படுவது போதாதாம்! 'இன்னும் படாத பாடு படுத்துங்கள்' என்கிறார்!!

காமராஜர் — விருதுநகர் பெற்ற வீணராக இன்றில்லை. விவேகிகள் வீற்றிருக்க வேண்டிய, தலைமைப்பீடத்திலே, அமர்ந்திருக்கிறார். அவர்தான் தோழர்களே, கூறுகிறார்; நம்மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமாம்!" 'வெந்தபுண்ணிலே வேலைப் பாய்ச்சுங்கள்' என்று, 'வேங்கைகளுக்கு' உபதேசம் புரிகிறார்! 'வேங்கைக்குப் பாடம், கற்றுக்கொடுக்கிறார் — அவர் விவேகிகள் இருக்கவேண்டிய இடத்திலே இருப்பவர் —ஆனாலும் சொல்லுகிறார்! அன்பர்களே, நம்மைக்கண்டு சர்க்கார் சகித்துக்கொண்டிருக்கக் கூடாதாம், அவர் சொல்கிறார்-இல்லை! இல்லை!—எச்சரிக்கை செய்கிறார்!

மலர்த்தோட்டம் நமது கழகம் — ஆனால் அங்குபுகுந்து படாதபாடு படுத்துகின்றனர் ஆளவந்தார். நம்மை ஆட்டிப்படைகின்றனர், காங்கிரஸ் ஆட்சியினர்.

காங்கிரஸ் ஆட்சியை ஆட்டிப்படைப்பவர் காமராஜர்—அவர் எச்சரிக்கை விடுகிறார், காங்கிரஸ் சர்க்காருக்கு!!

* * *

நாம், நேற்று முளைத்தவர்களல்ல! நமது இலட்சிய முரசு ஒலிக்க ஆரம்பித்தது இன்று நேற்றல்ல! சுமார் 30 ஆண்டுகளாக, நாம் உலவி வருகிறோம்! நமது கொள்கைகளைப் பரப்பி வருகிறோம்!!

கால்நூற்றாண்டு — கடந்துவிட்டோம். கண்ணியத்தோடு, வளர்ந்துவிட்டோம். வீழ்ந்துபட்ட ஒரு மாபெரும் சமுதாயத்தின் இழிநிலை துடைக்கத் துவங்கி, எண்ணற்ற ஆண்டுகளாகிவிட்டன! நமது பணி-நடைபெறாநாளில்லை. கால்நூற்றாண்டு—கதிரவன் வெயிலும் காலைப்பனியும் மாலையிருட்டும் கல்லடியும் சொல்லடியும் தாக்கியும்-நம் பணி ஓய்ந்தநாளில்லை! நாம் உழைக்காத நேரமில்லை!

இலட்சக்கணக்கான கூட்டங்கள், பல்லாயிரக்கணக்கான மாநாடுகள், இதுவரை நடத்தியிருக்கிறோம். பழைமை என்ற எதிரி, வடநாட்டு ஏகாதிபத்யம் என்ற விரோதி, மூடநம்பிக்கை என்கிற கோளாறு — ஆகியவைகளை எதிர்த்தே, இதுவரை நமது பணி நடைபெற்று வந்திருக்கிறது.

நமது எதிரிகள்—கோரமான உருவங்கள் ஒருமாபெரும் சமுதாயத்தையே சாக்கடை'யாக ஆக்கிய அவ்வளவு சக்திவாய்ந்தவை.

ஆயினும் எதிர்த்தோம் —கேலி! கல்லடி! சொல்லடி! தடியடி. ஆகியவைகளைத் தாங்கிக் கொண்டே எதிர்த்தோம்!!

நமது வாழ்வைச் சின்னபின்னப்படுத்தும் 'கோரமான கொள்கைகள்' என்கிற விரோதிகளோடு போராடிக்கொண்டிருக்கிறோம்.

நம்மை வீணராக்கிய வீண்கொள்கைகளை எதிர்த்தோம்—ஆனால் இதுவரை 'எதுவும்' ஏற்பட்டதில்லை.

எதிர்ப்போர் நாம்—ஆனால் 'எதிரிகள்' எவருக்கும் சிறு தீங்குகூட ஏற்பட்டதில்லை.

போராடுவோர் நாம்—ஆனால் நம்மைப் போராடுமளவுக்குச் செய்த 'வீண்கொள்கைகளின்' பாதுகாவலரிடையில், சிறு கலாம்கூட ஏற்பட்டது கிடையாது, நம்மால்!

கால் நூற்றாண்டு — கண்ணியமாகவே நடைபெற்று வந்திருக்கிறது.

வெள்ளையன் ஆண்டபோதும், நாம் பணி புரிந்தோம். சுயராஜ்யம் கிடைத்த பிறகும் பணி புரிகிறோம்.

அப்போதுஞ்சரி! இப்போதுஞ்சரி! வேதனைக்கு ஆளானோர் நாமே தவிர—நம் வாழ்வைக் குலைக்கும் 'கொள்கைகளை'ப் போர்த்தினோரல்ல!

கடந்த ஓராண்டைக் கேட்டாலே, நமது கதையைக் கண்ணீரோடு சொல்லும்!

திராவிட முன்னேற்றக் கழகம், துவங்கி, நாம் நடந்துவந்த சென்ற ஆண்டுப் பாதையைப் பார்த்தாலே போதும்—நாம் எவ்வளவு பரிதாபத்துக்குரியவர்கள்! ஆனாலும், நடந்துவந்துள்ளோம் என்பது விளங்கும்.

2035 கூட்டங்கள்

11 மாநாடுகள்

நம்மால், கடந்த ஓராண்டில், நடைபெற்றிருக்கின்றன. திராவிட முன்னேற்றக்கழகத்தின் 500க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் மூலம். நாள்தோறும் நிகழ்ந்திருக்கின்றன.

அன்றுஞ்சரி; இப்போதுஞ்சரி, நமது பணியால் சிறுபூசல் — ஏதாவது, உண்டா நாட்டில்? காட்டமுடியுமா?

வாழ்விழந்து வதைபட்டுக்கிடக்கும் ஒரு மாபெரும் சமுதாயத்தினராகிய நாம் மாற்றாரால் படாதபாடு படுத்தப்படுகிறோமே தவிர, சிறு தீங்கும், இன்று வரை, நமது பணியால் விளைந்தது கிடையாது.

இருந்தும் சொல்கிறார்-காமராசர், நம்மை விட்டுவைக்கக் கூடாதாம்!

* * *

கல்லடி, தடியடிகள் நம்மீது பாய்ந்ததுண்டு — தாங்கிக்கொண்டோம் — வளர்ந்தோம்! காலை ஒடித்தனர், கண்களைப் பறித்தனர், மாநாட்டைக் கொளுத்தினர், மக்களை சோடாபுட்டிகளால் தாக்கினர்—நாம் ஆத்திரங்கொண்டதே கிடையாது! பட்டப்பகலில் மதுரை—வைகையாற்றில் நமது மாநாட்டுப் பந்தலைக் கொளுத்தினர். நாம் பாயவில்லை — விரட்டவில்லை! பொறுமையோடுதானிருந்தோம்.

நமது இயக்க வரலாற்றிலே, நம்மீது துப்பாக்கி துரைத்தனம் நடைபெற்றதே இல்லை—குன்றத்தூரைத் தவிர!

மதுரைக் கொடுமை நிகழ்ந்தபோதும், நம்மீது பாய்ந்த, மாற்றார்மீது – துப்பாக்கி நீட்டப்படவேண்டி நேரிட்டதே தவிர, நம்மீது அல்ல! காங்கிரஸ் போர்வையில் நம் தலைவர்கள் மீது

காஞ்சியில் பொதுக் கூட்டம்

ஞாயிறு 5–10–50 மாலை

ஈ. வெ. கி. சம்பத்

சி. வி. எம். அண்ணாமலை

வெ. சம்பந்தன்

பேசுவர்.

தலைவர்: **எஸ். ஆனந்தம்**

இடம்: கரிக்கினிலமர்ந்தவள் கோயில் தெரு

—அழகிரி அறிவு மன்றம்

மாநில
திராவிட மாணவர் முன்னேற்றக் கழக
முதல் மாநாடு

8–11–50 புதன் காலை 9 மணிக்கு
சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில்
நடைபெறும்

தலைவர் தோழர் **இரா. சத்தியேந்திரன்** பி. ஏ., பி. எல்.

திறப்பாளர் தோழர் **சி. என். அண்ணாதுரை** எம். ஏ.,

வரவேற்புக்குழுத்தலைவர் தோழர்

கே. ஏ. மதியழகன் பி. ஏ.,

முன்னாள் அமைச்சர் தோழர் எஸ் முத்தையா பி.ஏ., பி.எல். 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஈ. வி. கே. சம்பத், மு. கருணாநிதி, இரா. இளம்வழுதி பி. ஏ., (ஆனர்ஸ்) கா. இளஞ்செழியன், பி. ஏ., (ஆனர்ஸ்) இராம. அரங்கண்ணல், நீலமேகம் வில்லாளன், பி. ஏ. (ஆனர்ஸ்) என். எஸ். இளங்கோ ஆகியோரும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

மாணவ மாணவிகளே, திரண்டு வருக!

வி. சண்ணன்,	டி. பாண்டியன்,	கே. ராமசாமி,
மயிலை வி. சீனிவாசன்,	பொருளாளர்.	டி. கே. பொன்வேலு
(உயர்நிலைப்பள்ளிச் செயலாளர்கள்.)		(கல்லூரிச் செயலாளர்கள்.)

பாய்ந்தோரைத் தடுக்கத் துப்பாக்கி வேலைசெய்ததே தவிர, நம்மால் அல்ல!!

காரணம், அன்றுமுதல் இன்றுவரை, அட்டகாசச் செயல்களில் ஈடுபடுவோரல்ல நாம். தனிப்பட்டோரிடம் என்றுமே, நாம் நமது கவனத்தைச் செலுத்தியதில்லை. நமது பணியின் பெருமை தெரியும் நமக்கு. அதற்கு நாம் செய்யவேண்டிய தியாகத்தின் நிலையும் புரியும் நமக்கு.

"எதிரிகளின் தூற்றலை முறியடிப்பது அல்ல நம்முன் உள்ளவேலை! நாம் மகத்தான பணியினை மேற்கொண்டுவிட்டோம்! நமது மாற்றார்கள், மதவெறி, சாதிவெறி, மூடப்பழக்கவழக்கம், சுரண்டல் முறை, எதேச்சாதிகாரம் என்று பலப்பல! பொறாமை கொண்டோர், பொச்சரிப்புக்காரர்கள், அரசியல் உடலிலே தோன்றும் அரிப்புகள்! நமது வேலை அவர்களிடம், மல்லுக்கு நிற்பது அல்ல அறிவுப்பணி புரியும் நமக்கு ஆற்றல் இருப்பது மெய்யானால், நாம் இந்தச் சில்லறைக்குச் சிந்தனையைச் செலவிடலாகாது. இதை தயவுசெய்து மனதிலே பதியவைத்துக்கொள்ளுங்கள். கண்ணியம் தோற்காது - உறுதியாக இதைச் சொல்லுங்கள். தொடர்ந்து பணியாற்றுங்கள் -- திராவிடச் சமுதாயத்திலே, மோதலும் பேதமும் ஏற்படாத வகையில்! யானைபிடிக்கச் செல்பவன் பூனைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு செல்வது நோக்கமல்லவா! சந்தனக்காட்டுக்குச் செல்பவன், சருகுகளைக்கண்டு, இவை போதும் என்று, இருந்துவிடலாமா?" – இதுதான் வீழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக வீரத்தோடு பணியாற்றும் நமது கழகத்தவருக்கு, நாம் அடிக்கடி காட்டி வரும்பாதை.

இருந்தும், நம்மை நோக்கி, இப்போது துப்பாக்கி துரைத்தனம் நடத்தத் துவங்கியிருக்கிறது! தடியடி தர்பார் நடைபெற ஆரம்பித்திருக்கிறது!

எட்டுமுறை சுட்டிருக்கிறார்கள்!

தமிழ் நாடே – கண்டதில்லை;
எட்டு முறைகள்!!

விடாது, சுட்டிருக்கிறார்கள்
எட்டு முறைகள்!

பெரிய நகரமல்ல; சிற்றூர், அங்கு
எட்டு முறைகள்!

பெரிய புரட்சி நடக்கவில்லை, பேசப்போனார்கள்—அதற்கு எட்டு முறைகள்!

எதற்கும் நடைபெறாத கொடுமை! எப்போதும் நிகழாத கொடுமை! எங்கும், காணாத கொடுமை!- ஆனால் காங்கிரசாட்சியிலே நடைபெற்றிருக்கிறது. குன்றத்தூரிலே நடைபெற்றிருக்கிறது — அதுகண்டு, கொதிக்கவேண்டிய மக்கள் தலைவர் — அப்படி கூறிக்கொள்பவர்—காங்கிரஸ் தலைவர் காமராஜ் கூறுகிறார், "திராவிட இயக்கத்தினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க" வேண்டுமாம்!

* * *

விரோதிகளோடு மோதுவது கிடையாது. பெரிய சதி செய்து — அரசாங்கத்தை மாற்றும், கெடுமதிகொண்டோரல்ல நாம். நாட்டை, அமைதி புரியாக்குவதே நம் பணிஎன்று பேசியுலவுகிறோம்! சட்ட சபை நமக்கு எட்டிக்காய்! பதவிப்போட்டி- நம்மால் வெறுக்கப்பட்ட தூசு! தேர்தலில் போட்டியிட விரும்புவோரல்ல நாம்!

இன்று ஆள்வோரை, எதற்கெடுத்தாலும் தூற்றித் திரியும் கொள்கை நம்மிடம் கிடையாது.

நல்லது செய்தபோது நாம் பாராட்டத் தவறியதில்லை!

மதுவிலக்கு —ஜமீன் ஒழிப்பு—கோயில் நுழைவு—மடச் சீர்திருத்த மசோதா— இந்து மதச் சீர்திருத்தம் — இவை காங்கிரஸ் ஆட்சி கொண்டுவந்த நடவடிக்கைகள்!

காங்கிரஸ் செய்கிறது — என்பதற்காக நாம் காயவில்லை. ஒத்துழைத்தோம்! மக்கள் மன்றத்தின் ஆதரவைத் திரட்டித் தந்தோம். காங்கிரஸ் பிரமுகர்களோடு சேர்ந்து ஒத்துழைத்தோம்.

நாடு சீர்பெற நடைபெறும் நடவடிக்கைகளிலெல்லாம் நாம் கலந்து பணியாற்றி வருகிறோம். சுருங்கச் சொன்னால், நமது கழகம் ஒரு அறிவாலயம். நமது கழகம் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம்.

இது, இருக்கக் கூடாதாம், கூறுகிறார் காமராஜர்! நாம் வசதியற்றவர்கள்—அவர்களிடம் பிரச்சாரப் பீரங்கிகள் ஏராளம், பணம் கொடுக்கும் பிரபுக்கள் பலர், ஆட்சி அதிகாரம் கையிலிருக்கிறது. இருந்தும் கூறுகிறார், நாம் நடமாடக் கூடாதாம்!!

நாம் சட்ட வரம்புக்குட்பட்டவர்கள், நாட்டில் அராஜகமும் அமைதியின்மையும் தாண்டவமாடக் கூடாது என்பதே நமது ஆசை. 'மக்கள் மன்றத்துக்கு நமது கருத்துக்களையுரைப்போம். ஏற்றால் பெருமிதங் கொள்வோம்,—இதே நமது தாரக மந்திரம்.

"மக்கள் உரிமைகள் மண்ணிலே வீசப்படக் கூடாது. மனிதனின் ஜீவாதார உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். பேசவும், எழுதவும், எண்ணியதைக் கூறவும், ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அது, பறிக்கப்படுதல் அடாது! கூடாது! தகாது! ஆகாது!!"

இதுபோல வீரமுழக்கமிட்டனர், சுயராஜ்யப் போராட்டத்தின்போது, இன்று ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ்காரர்கள். ஆனால், இன்று சரித்திரம் திரும்புகிறது! பேச்சுரிமையும், எழுத்துரிமையும் அடக்குமுறை அம்புகளால் பறிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. 'தேர்தல்' நெருங்க நெருங்க, இந்தப் போக்கு அதிகமாகிக்கொண்டேயிருக்கிறது.

அடிக்கப் பொறுத்துக் கிடக்கும் பசுவுக்கும் ஆத்திரம் வருமாம் — விடாது தாக்கப்பட்டால்! நம்மீது, இன்றைய ஆட்சியினர் வீசிவரும் அடக்குமுறை ஈட்டிகள் ஒன்றல்ல, இரண்டல்ல; பொறுத்துப் பார்த்தோம்—சகிக்கமுடியவில்லை.

அதன் விளைவாகவே, மக்களின் ஜீவாதார உரிமையான 'பேச்சுரிமை'யை நிலைநாட்டி, இந்த ஆளவந்தாரின் போக்கை, மக்களுக்கு எடுத்துக் காட்ட முடிவு செய்தோம்.

கூவிடும் குயில், ஆடிடும் மயில்—கண்டு, பாய்பவனைக் கொடுங்கோலன் என்றே கூறுவர். எதேச்சையாகப் பறந்து திரியும் உரிமையோடு பறவைகள் கூட வாழ்கின்றன—ஆனால், அந்த உரிமை மனிதனுக்கு மறுக்கப்படுகிறது! விசித்திரமான நிலை.

பாலை விஷமென்று கருதுகின்றனர். பசுவைப் பாம்பென்று நினைக்கின்றனர். நிலவை நெருப்பு என்று எண்ணுகின்றனர் — இந்த ஆளவந்தார். அதன் காரணமாக,

துப்பாக்கி வேலை செய்கிறது!
48 மணி நேரம்—ஊரடங்குச் சட்டம்!!
சிறு ஊர்—அங்கு 48 மணி நேரம்!!!

கேவலமான போக்கு. அது பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாத காமராஜருக்கு — நம்மைப் பற்றிய 'கிலி' அதிகமாயிருக்கிறது!

* * *

வாழ்விழந்து வதைபட்டுப் போன சமுதாயம் இன்று வீரமுழக்கமிடத் துவங்கிவிட்டது. வஞ்சகர் சூழ்ச்சியும், 'வரட்டுத் தவளை'கள் கூச்சலும் இனி—இங்கு எடுபடாது. இதை, அடக்குமுறைப் பாதையில் செல்லும் அனைவரும் உணரவேண்டும். புது மறுமலர்ச்சி, நாட்டிலே பரவிவருகிறது. அதை உணர மறுப்பது—விவேகமல்ல. வீம்பால், வீண்பாதையில் நடப்பது, ஆபத்தைத்தான் தரும்.

காமராஜர்—தேர்தலை நினைத்து-மாபெரும் சமுதாயத்தின் எழுச்சிக் குரலை ஒடுக்க நினைக்கிறார். துப்பாக்கியைத்தூண்டி விடுகிறார்! தடியடி தர்பாரைக் காணத் தூண்டுகிறார்! நாம் நடமாடக் கூடாதென்கிறார்! நம்மை 'மரண கீதம்' தயாரிக்கச் சொல்கிறார்!!

'புயலே' வா என்றழைப்பதும், 'எரிமலை'யே கிளம்பு என்பதும், 'வெள்ளமே' வருகவெனக்கூவுவதும் விபத்தை விரும்பியேற்போரின் செயல்.

ஆனாலும், ஆட்சியாளருக்கு "எச்சரிக்கை" செய்கிறார்—நம்மையும் 'மரண கீதம்' தயாரிக்கச் சொல்கிறார்!!

விரும்பாத நிலை—ஆனாலும் விரும்புகிறார். இது, அவருக்கு அழகல்ல — நாட்டுக்கும் நல்லதல்ல! ஆனாலும், தூண்டுகிறார்!!

ஈரோட்டில்

12—11—50 ஞாயிறு மாலை
காரைவாய்க்கால் மைதானத்தில்
தோழர் **எஸ். ஆர். சந்தானம்** தலைமையில்
திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டம்
நடைபெறும்.
அது சமயம், பொதுச் செயலாளர்

அண்ணா
ஈ. வெ. கி. சம்பத்

பேசுவார்கள்.

தி. மு. க. ஈரோடு.

'சுதந்திரம்' சுய உருவில்!

5—10—50ல் சென்னையில் 'பிராமணாள்' என்ற சொல்லை நீக்கிவிட்ட ஓட்டல் முதலாளியைப் பாராட்டிய சுவரொட்டியை ஒட்டியதற்காக, தி. மு. க. தோழர் திராவிடமணியை போலீஸ் ஸ்டேஷனில் இரவு முழுவதும் காவலில் வைத்ததோடு, மறுநாள் வழக்கு மன்றத்தில் ரூ 15 அபராதம் விதிக்கப்பட்டது.

5—10—50ல் திண்டுக்கல்லில், 'தலைவர்களை விடுதலை செய்' என்று எழுதியமைக்காக தோழர் தங்கவேலரைக் கைது செய்துள்ளனர்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

நமது இரத்தம்—இலட்சியக் காணிக்கை

வீரமும் தியாகமும் வீண் போகாது

குண்டுகள்—காலம் தரும் 'செண்டுகள்'

கட்டுப்பாடும், கண்ணியமும் நமது கவசம்

'அடக்குமுறை தர்பார்': பொதுச் செயலாளர் அறிக்கை

[திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, 28—10—50 தேதியிட்டு-சென்னை தலைமைக்காரியாலயத்திலிருந்து விடுத்திருக்கும் அறிக்கை இது. இந்திய உபகண்ட முழுமையுள்ள பத்திரிகைகளுக்கெல்லாம் பொதுச் செயலாளரின் கண்டன அறிக்கையின் ஆங்கில நகல்கள், அனுப்பப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.]

சென்ற கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிகளால் உள்ளம் நொந்து கிடக்கும் தோழர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கு அல்ல, இந்த அறிக்கை—இந்த அறிக்கை நிகழ்ச்சிகள் இனி நேரிட இருக்கும் 'பேரிடிகளுக்கு' முன்னறிவிப்பு. எனவே, 'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு' என்ற உறுதியை மேலும் நாம் பலப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளவே இதனைத் தீட்டுகிறேன்.

நாம் நேர்மையில் நாட்டம் கொண்டவர்கள்—உன்னதமான உயரிய இலட்சியங்களுக்காக உழைப்பவர்கள்—நமது உழைப்பின்மூலம் புதியதோர் சமுகம் உருவாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். நமது நோக்கம் உன்னதமானது என்பதுமட்டுமல்ல, அந்த நோக்கம் ஈடேறுவதற்காக நாம் கையாளும் முறைகளும், மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தூய்மையானவை. மல்லிகைத் தோட்டம் காணவேண்டும் என்பதற்காக மாந்தோப்பை அழிப்பவர்களல்ல! நாம் கள்ளியும் முள்ளும் படர்ந்துள்ள இடத்தைச் செம்மைப்படுத்தி, பிறகு அங்கு மலர்த் தோட்டம் அமைக்க வேண்டும் என்ற மாண்புடைய நோக்கம் கொண்டவர்கள்.

கள்ளியும் முள்ளும், கால்களையும் கைகளையும் குத்தி இரத்தம் பீறிட்டு வரச் செய்யும் என்பதை எதிர்பார்த்தே, காரியத்திலே இறங்கியிருக்கிறோம்.

காட்டை அழிக்க முற்படும்போது கருநாகம் தீண்டக்கூடும் என்பதை அறியாதவர்களுமல்ல, நாம்.

நாட்டைப் புதுநிலைக்குக் கொண்டு வருவதற்கான அறப்போரில், கடுமையான எதிர்ப்பு, கருத்துக் குருடர்களிடமிருந்து கிளம்பும் என்பதும், நாம் எதிர்பாராததல்ல.

எனினும் சென்றகிழமை நடைபெற்ற நிகழ்ச்சிகள் எவருடைய உள்ளத்தையும் உலுக்கிவிடக்கூடியனவாக இருந்தன — மின்சார வேகத்தில் நடைபெற்றன.

நமது தோழர்கள், தாக்கப்பட்டனர்—தடிகொண்டு தாக்கப்பட்டனர்—துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டனர்—ஆடவர்மட்டுமல்ல, ஆரணங்குகளும் தாக்கப்பட்டனர்—கீழே வீழுமளவு தாக்கப்பட்டனர்! வீழ்ந்த பிறகும் தாக்கப்பட்டனர்—கைகளில், கால்களில், மண்டையில், கழுத்தில், கணுக்காலில்—தாக்கப்பட்டனர்!

24ந்தேதி காலையில், சென்னை கோட்டை அருகே உள்ள வெளி, ஒரு களம்போல ஆக்கப்பட்டது. கோட்டையைத்தாக்க ஏதேனும் எதிரிப்படை வந்தால், இவ்வளவு சுறுசுறுப்பைக் காட்டுவார்களோ, இல்லையோ, நாமறியோம், அன்று அதிகாரவர்க்கம் காட்டிய சுறுசுறுப்பு யாரையும் பிரமிக்க வைக்கக்கூடிய விதமாக இருந்தது. காரணம் என்ன? கோட்டை அருகே, என்ன செய்யச் சென்றனர் நமது தோழர்கள்? கையிலே, தமது மூதாதையர்போல் வாளும் வேலும் ஏந்திக்கொண்டு சென்றனரா — அல்லது இந்நாட்களிலே புரட்சிப் படைகள் கிளம்பும்போது எடுத்துச் செல்வதுபோல சுழல் துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் எடுத்துக்கொண்டு சென்றனரா! இல்லையே!! சட்டப்படி நிறுவப்பட்டு சட்டபூர்வமான முறையிலே பணிபுரிந்துகொண்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தார், சட்டத்துக்கு உட்பட்ட செயலாகிய, 'கருப்புக்கொடி' காட்டும் காரியமாற்றத்தான், கருப்புக்கொடிகளைக் கையில் ஏந்திக்கொண்டு சென்றனர், கோட்டை வெளியை நோக்கி. இது கண்டுதான், எடுத்தனர் தடிகளை, பழைய ஏகாதிபத்யம் வெட்கித் தலைகுனியும்படியான 'வீராவேசம்' காட்டி, நமது தோழர்களை அடித்தனர்—அடித்தனர்—தடிகள் நொருங்குமளவு அடித்தனர்!

'கருப்புக்கொடி' காட்டுவது, 'ஜனநாயக' உரிமைகளிலே ஒன்று. எந்த நாகரிக சர்க்காரும் இதைத்தடுப்பதில்லை. ஆளவந்தார்களிடம் ஆட்பட்டிருப்பவர்கள் 'அதிருப்தி'யைக்காட்ட கருப்புக்கொடி பிடித்தல், பலநாடுகளிலும் உள்ள ஒருமுறை. சிலதிங்களுக்கு முன்பு 'இந்தோனேஷியா'விலே, 'விருந்தினராகச்' சென்றாரே, பண்டிதநேரு, அப்போது, அங்கு, அவருக்குச் சிலர் கருப்புக்கொடி காட்டினர்—சுகர்ணோ — இந்தோனேஷியா விடுதலைவீரன், தடுத்தாரில்லை—அந்த நாட்டிலேயும் தடிகளும் துப்பாக்கிகளும் உள்ளன—ஆனால், அந்தத்துரைத்தனம், கள்ளர்களையும் கொள்ளைக்காரர்களையும், ஒடுக்க, அவைகளைப் பயன்படுத்துகிறது — கருப்புக்கொடிகள் பறந்தன!

இங்கோ! கருப்புக்கொடி காட்டச்சென்ற நமது தோழர்கள், இரத்தம் ஒழுக ஒழுக நின்றனர்! கோட்டை வெளியிலே இரத்தம் கொட்டப்பட்டது! திராவிடரின் இரத்தம்!

திவாகருக்குக் கருப்புக்கொடி காட்டினோம்—அவர் வந்தபோது. ஆளவந்தார்கள், நமது முயற்சியைக் கேலியாலும் அலட்சியத்தாலும் முறியடித்துவிடலாம் என்று மனப்பால் குடித்தனர்—எனவே, ஏதோ மக்களின் உரிமையை மதிக்கும் மகானுபாவர்களைப் போல நடித்து, கருப்புக்கொடி பிடிக்க அனுமதித்தனர் — ஆயிரக்கணக்கிலே கொடிகள்—அமைதியான முறையிலே நிகழ்ச்சி — போலீசாருக்கு ஒரு சிறு தொல்லையும் ஏற்படாத முறையிலே, நடைபெற்றது. நேர்மையாளர்கள், நமது போக்கின் கண்ணியத்தைப் பாராட்டினர் ஒழுங்கீனமான செயல் துளியுமின்றி! அருவருப்பான முறை எதுமின்றி, பலாத்கார வாடை ஒரு அணுவுமின்றி, அன்றைய நிகழ்ச்சி இருந்தது. நாடு அறியும் இதனை—நாடாள்வோரும் அறிவர்! அறிந்திருந்தும், 24-ந்தேதி, ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி காட்டச் சென்ற நமது தோழர்கள் மீது கடுமையான, கோரமான அடக்குமுறையை அவிழ்த்து விட்டனர்!

திராவிடம் தனிஉரிமை நாடு ஆகவேண்டும் என்ற நமது குறிக்கோளை உலகம் உணரவேண்டும் என்பதற்காவும், இன்றுள்ள டில்லி மத்ய சர்க்காரின் போக்கும் முறையும் கண்டு நாம் அதிருப்தி அடைந்திருக்கிறோம் என்பதை அறிவுறுத்தவும், மத்தியசர்க்காரிலுள்ள காங்கிரஸ் சூத்ரதாரிகளான மந்திரிகள் இங்கு வருகிறபோது அவர்களுக்குக் கருப்புக் கொடி பிடிப்பது என்பது, நாம் கொண்டுள்ள வேலைத்திட்டம்.

இதிலே இரகசியம் இல்லை—மறைவு இல்லை. இதுபோலச் செய்யப் போகிறோம் என்பதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லியிருக்கிறோம்—சர்க்காருக்கும், ஒற்றர்களும், சுருக்கெழுத்திலாக்காவினரும் அறிவித்திருக்கிறார்கள், திவாகர் வந்தபோதும், அமைதியும் கண்ணியமும் நிறைந்த விதமாகக் கருப்புக்கொடி காட்டியிருக்கிறோம். அதன் விளைவாக, பலாத்காரமோ கலகமோ குழப்பமோ எங்கும் ஏற்படவுமில்லை. எதிர்க்கட்சி ஏடுகள் கூட, ஏளனமாக எழுதுவதாக எண்ணிக்கொண்டு, திவாகர் கவலைப்படவில்லை—கருப்புக்கொடி கண்டு அவர் சிரித்தார்—நானும் திராவிடனல்லவா என்று கேட்டார் — என்று தீட்டினவேயொழிய, தி. மு. கழகத்தினர் தியாகராயநகரிலே கருப்புக்கொடி காட்டினர், அதனால் இன்ன இடத்திலே தீப்பிடித்துக்கொண்டது, இவ்வளவு ஆட்களுக்கு அடிபட்டது, என்று எழுதவில்லை!

இவ்வளவு அமைதியான முறையிலே கருப்புக் கொடி காட்டிய தோழர்களேதான் 24ந் தேதியும், ஆச்சாரியாருக்குக் காட்டச் சென்றனர் —எனினும் அவர்கள் தாக்கப்பட்டனர். ஏன்?

ஆளவந்தார்களின் போக்கு மாறுகிறது! ஆமாம்! திவாகர் வந்தபோது ஆளவந்தார்கள், கருப்புக் கொடிக்காரர்கள் விஷயமாக அலட்சியமாக இருந்துவிட்டால், 'பொச பொச'வெனப் போய்விடும்—ஒரு பத்துப்பேர் கூடச் சேரமாட்டார்கள், என்று எண்ணினர்—கண்ட காட்சியோ அவர்களுக்குக் கலக்கமூட்டிவிட்டது. அலட்சியப்படுத்தினோம் பலிக்கவில்லை, இம்முறை அடித்து விரட்டுவோம், பலிக்கிறதா பார்ப்போம் என்று எண்ணி முறையை மாற்றிக்கொண்டனர்! அதன் விளைவுதான், அன்று நடைபெற்ற அடக்குமுறை தர்பார்!

அன்று அடக்குமுறை தர்பார் நடத்திய அதிகாரிகளை, நமது இஷ்டத்துக்கு ஏற்றபடி நடந்துகொள்ளச் செய்யும் அரசியல் அதிகாரத்தை அடுத்த தேர்தலிலே— விரும்பினால் —பெறக்கூடிய நிலையில்தான் நாம் இருக்கிறோம்!

அன்று அடக்குமுறை தர்பார்நடத்திய வெள்ளை அதிகாரவர்க்கத்தாரிடம், இன்றைய ஆளவந்தார்கள் 'ஆகஸ்ட்டிலே' சிக்கிச் சீரழிவுபட்டவர்கள் தான்! இவை, உலகறிந்த உண்மை! எனினும், ஊராள்வோருக்கு ஊழியம்செய்

யும் முறை, உத்தமர்களை இரத்தம் ஒழுக ஒழுக அடிப்பதுதான், என்று அதிகார வர்க்கம் எண்ணுகிறதுபோலும்! நடக்கட்டும்—நடப்பதெல்லாம் நடக்கட்டும், நண்பர்களே! நாம் தாக்கப்படுகிறோம், வளர்ந்து வருவதால்—நமது வளர்ச்சி தமது வீழ்ச்சிக்கு அறிகுறி என்று நடுங்கும் நிலைப்பினர், எதேச்சாதிகார ஆயுதம் கொண்டு நம்மைத் தாக்குகின்றனர். நாம் தாங்கிக்கொள்வோம்! அடிப்பவர்களின் இரும்பு மனமும் உருகும் அளவுக்கு, நமது இரத்தத்தைக் கொட்டச் சித்தமாக இருக்கிறோம். நமது இரத்தம், 'மாபாபி'களால் கெடுக்கப்பட்டிருக்கும் நமது மண்டலத்தை, நிச்சயமாகப் புனிதபுரியாக்கும்!

ஒன்று கூறுவேன் உங்களுக்கு—ஓயாமல் இதைத்தான் கூறிக்கொண்டே இருப்பேன்—அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க, தாக்குதல் வளர வளர, நமது சகிப்புத்தன்மையும், உள்ளத் தூய்மையும் வளர்ந்து கொண்டிருக்கவேண்டும். ஒரு துளியும் பலாத்கார உணர்ச்சியோ, அமைதியைக் கெடுக்கும் செயலோ தலைகாட்டக்கூடாது! நமது இலட்சியம், அதிகாரிகளின் போக்கை மாற்றுகிற காரியமல்ல—நமது போர், அடக்குமுறையை நடாத்தும் அதிகார வர்க்கத்திடமல்ல! அம்புகள்பாய்ந்து வரும—நமதுஉடலைத் துளைக்கும்—உதிரம் பெருகும்—ஆனால், அதற்காக அம்புகளைக் கவனிப்பதா அறிவுடைமை—எய்தவர்களை அல்லவா நாம் எதிர்நோக்கிச் செல்லவேண்டும்—எதேச்சாதிகார ஆட்சிமுறையல்லவா இந்த அம்புகளை எய்துகொண்டுள்ளது! நமது நோக்கம் அந்த எதேச்சாதிகார ஆட்சி முறையை மாற்றி அமைப்பது! அதனை மறவாதீர்—இம்மியும் நகராதீர், தூய இலட்சியப் பாதையைவிட்டு. தயர் துடைப்போர்போல் கடித்துத் தூண்டிவிடுவோர் வரக்கூடும்—இவ்வளவு இடுக்கண்களையும் சமாளிக்க வேண்டாமா, நாமென்ன மரக்கட்டைகளா 'என்று 'ரோஷமூட்டி'விடுவோர் வரக்கூடும்—மக்களின் சக்தி திரண்டு உருவாகும்போது இப்பவர்கள் தோன்றுவர், சக்தியைச் சிதைக்க. செவி சாய்க்காதீர்! ஒழுகும் இரத்தத்தைத் துடைத்துக்கொள்ளுங்கள், உன்னத இலட்சியத்தை மின்னிடச் செய்யுங்கள்! நாம் தடிகொண்டு தாக்கப்படவேண்டிய அளவுக்கு இன்று வளர்ந்துவிட்டிருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள்—நம்மை அலறச் செய்வதற்காக ஆட்சியாளர்கள் காட்டும் காட்டுமுறை கண்டு கைகொட்டிச் சிரிப்பீர்கள்! நம்மிலே பலருக்கு — நூற்றுக்கணக்கானவர்களுக்கு, தியாகத் தழும்புகள் ஏற்பட்டுள்ளன—விடுதலைப் படையின் முன்னணி வீரர்களாயினர் அந்த உத்தமர்கள்! அவர்களை நான் வாழ்த்துகிறேன்—அவர்களின் வீரத்தைத், தியாகத்தைப் போற்றுகிறேன்—அவர்களுக்கு உள்ள அளவு உள்ள உரம் நமக்கும், வளர்ந்து வரும் நமது கழகத் தோழர்கள் அனைவருக்கும் ஏற்படவேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்! குருதி கொட்டிய வீரர்காள்! வாழ்க உமது புகழ்! வளர்க உமது தொகை!!

ஆச்சாரியார் வந்தார், அடக்கு முறை தாண்டவமாடிற்று!

ஆச்சாரியார் வந்தார், திராவிடர்கள் தடிகொண்டு தாக்கப்பட்டனர்.

ஆச்சாரியார் வந்தார் 34-திராவிடர்கள் சிறையிலே தள்ளப்பட்டுள்ளனர்!

இனி, ஒவ்வொரு வடநாட்டு மந்திரி இங்கு வருகிற போதும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்த 'காணிக்கை' செலுத்தத்தான் வேண்டும் போல் தோன்றுகிறது. பசி, தீருமட்டும பலி கொள்ளட்டும்—மாண்டவர் போக மிச்சம் உள்ளவர்கள் திரு இடத்தில் வாழட்டும். இதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ளச் சொல்கிறேன்.

ஒரு தலையங்கத்தால், ஒரு படத்தால், துண்டு துணுக்குகளால், தலைவர்களின் பேச்சால், நம்மை ஒழித்துவிடலாம் என்று எண்ணிய ஆளவந்தார்கள், இன்று நாம் அந்த நிலையைக்கடந்து நெடுந்தூரம் முன்னேறி விட்டோம் என்பதை அறிந்து தடியும் துப்பாக்கியும் தூக்கிக்கொண்டு துரத்திக்கொண்டு வருகிறார்கள். நாம் செல்லும் இடம் இலட்சியபூமி, இவர்கள் நம்மை நெடுந்தூரம் பின்தொடர முடியாது. அவர்கள் ஓயுமட்டும், தாக்கட்டும்—நாம் நாலுகோடிக்குமேல் இருக்கிறோம்—அவர்களின் அகோரப் பசிக்கு ஒரு ஆயிரம் தருவோம்—அயரவேண்டாம்.

தடிகொண்டு தாக்கும்போதும், நமது உற்ற தோழனின் மண்டை பிளந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு வருகிறபோதும், காணச்சகியாத காட்சியாகத்தான் இருக்கும், மனம் எரிமலையாகத்தான் செய்யும்—எனினும் அந்தச்சமயத்திலே காட்டும் பொறுமையும் அடக்கமும்தான், உண்மை வீரருக்கு, இலட்சிய வீரருக்கு அழகு! மனம் பதறி ஒரு சிறு செயல் செய்திட்டாலும், பெரியதோர் இயக்கம் பாழ்பட்டுவிடும்—பாலுக்கு அழும் குழந்தைக்குப் பாம்பைப் பிடித்து விளையாடக்கொடுக்கும் பேதமையும் ஆபத்தும் நிரம்பிய செயலாகும் அது.

கொடுமையான தாக்குதலின் போதும் கண்ணியத்தைக் காப்பாற்றிய தோழர்களை நான் பாராட்டுகிறேன். இரத்தம் ஒழுகியநேரத்திலேயும் இலட்சிய வீரராக விளங்கிய நண்பர்களைப் பாராட்டுகிறேன். அவர்களைக் கண்டதும், கோழையும் வீரனாவான்—கொடுமையாளனும் குணவானாக முயற்சிப்பான்! அவர்களின் தொகை வளரவேண்டும்.

சிறையிலே வாடுகிறார்கள் நமது தோழர்கள் — சிறைப்பட்டுள்ளனர் திராவிடத்தை மீட்கும் அறப்போரிலே ஈடுபட்டுள்ள செம்மல்கள்! அவர்கள் சென்றுள்ள இடம், நாமெல்லாம், முறைப்படி இனி, செல்லவேண்டிய இடம்!

தாய்மார்கள் தனிச்சிறப்புப் பெற்றனர், அன்றைய 'தர்பாரில்' அவர்களும் அடிபட்டனர்—தடிகொண்டு அவர்களையும் தாக்கினர்!

இருபெரும் குற்றங்களல்லவா அவர்கள் புரிகிறார்கள்! வீரப்புதல்வர்களைப் பெறுகிறார்கள் — போதாதென்று — வீரமாக அவர்களே களமும் செல்கிறார்கள்!! இந்த இருகுற்றங்களையும், எப்படிப் பொறுக்கமுடியும், எதேச்சாதிகார வெறிபிடித்த ஆளவந்தார்களால்! எனவே தாய்மார்களையும் தாக்கினர்! தாய்மார்களின் குருதி கொட்டப்பட்டது!!

தி. மு. கழகம் பேச்சாளர்களையும் எழுத்தாளர்களையும் மட்டும் கொண்டது என்று எண்ணிய ஆளவந்தார்கள், கழகம், தியாகத்தழும்பைப் பெறத்தயாராக உள்ளதோர் அணிவகுப்பு இது, என்பதைக் கண்டுகொண்டனர். எனவே இரண்டு நாட்களுக்கெல்லாம், 'ஜார்' பூஜை செய்தனர்.

26ல் குன்றத்தூரில் 144 தடையை மீறச்சென்றதோழர்கள் என்.வி. நடராசன், பாலசுந்தரம் இருவரையும் கைது செய்து, குன்றத்தூரில் குடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களைத் தடிகொண்டு தாக்கி விரட்டியதுடன் நில்லாமல், துப்பாக்கிகொண்டு சுட்டிருக்கின்றனர். குன்றத்தூரின் வரலாற்றிலேயே இதுபோல் நடைபெற்றிராது—உப்புக்காய்ச்சியபோதும் சரி, வரிகொடா இயக்கத்தின்போதும் சரி— எப்போதும் நடைபெறாத கொடுமை—எட்டு ரவுண்டு சுட்டிருக்கின்றனர் துப்பாக்கிகொண்டு, மக்களை—மங்களகரமான மஞ்சள் பெட்டியிலே ஓட்டுபோட்டு, மகானுபாவர்களுக்கு முடிசூட்டி மகிழ்ந்த மக்களை! மூவருக்குக்காயம் — இருவர் ஆஸ்பத்திரியில்!! இருபதபேருக்குமேல சிறையில!

வழியேபோனவர்கள், வண்டியில் சென்றவர்கள், மோடார் ஓட்டிகள் சகலருக்கும் தடியடி! ராமராஜ்யமாமே இது! சாந்தம் சத்தியம் இரண்டுக்காக வாழ்ந்து வீழ்த்தப்பட்ட உத்தமரின் பெயரால் வாரன்வோர் துரைத்தனத்திலே துப்பாக்கி பேசுகிறது! எவ்வளவு வேகமாக, வீழ்ச்சிக்குச்செல்கிறார்கள் இந்தஆளவந்தார்கள் என்பதைத்தான், உலகுக்கு எட்டு ரவுண்டு வேட்டும் முழக்கமிட்டுக்காட்டிற்று. மூவருக்குக் காயமாம்—முப்பதுபேர் கொலைப்பட்டாலும், கேட்பார் யார்! ஒரு சிறு அறிக்கை வெளியிட்டுவிடமல்லவா சர்க்கார்—போலீசார் கல்லால் தாக்கப்பட்டனர், எனவே சுட்டனர்! 'ஜாலியன்வாலா' நடத்திய 'டயர்'மட்டும் சமாதானமும் காரணமும் சொல்லாமலா இருந்தான்! எந்தக்கொடுங்கோலன்தான் மக்களைக் கொடுமை செய்ததற்குக் காரணம் கூறாமலிருந்தான்!

குன்றத்தூர் மக்கள் அன்று அல்லல் மிகப்பட்டனர் என்று அறிய மிகவும வருந்துகிறேன். இயக்கத்திலே தொடர்பு இல்லாத பொதுமக்களில் பலருக்கும்கூட தடியடி என்பதறிந்து துக்கப்படுகிறேன்.

துப்பாக்கியால் தாக்கப்பட்ட தோழர்களுக்கு, நான் என்ன ஆறுதல் கூறமுடியும்! அவர்களின் வீரமும் தியாகமும் வீண்போகாது என்றுமட்டும் உறுதியாகக்கூறுவேன். திராவிட விடுதலைக்காக அவர்கள்,குண்டுகளைத் தாங்கிக்கொண்டனர்—குண்டுகள் அல்ல அவை-இலட்சியவாதிக்குக் காலதேவன் தரும் மலர்ச்செண்டுகள்!! வரலாற்றிலே குறிப்பிடப்படப்போகும் சம்பவத்திலே அவர்கள் முக்கியமானதோர் இடம் பெற்றுள்ளனர். விரைவிலே அவர்கள் நலிவு நீங்கி, தமிழகத்திலே உலவி, தாம்பெற்ற 'வடுக்களை' காட்டுவதன்மூலம், திராவிடத் தோழர்களை எஃகு உள்ளத்தினராக வேண்டும் என்று விரும்புகிறேன்.

துப்பாக்கியும் பேசிவிட்டது! இனியும் என்ன பாக்கி? அணுகுண்டோ? துரைத்தனம் நடத்தும் தோழர்களே! இந்த அடக்குமுறையினால் எவ்வளவு திராவிடர்களை வீழ்த்திவிடமுடியும் என்று எண்ணுகிறீர்கள்? அடக்குமுறைகள், வெற்றிதந்தனவா இதுவரையில், யாருக்கேனும், எங்கேனும்! ஏனோ இந்த விபரீத விளையாட்டு! வேண்டாம், சட்டத்தையும் அமைதியையும் போற்றிக்காப்பாற்றும், அறநெறி அறிந்த திராவிடர்களை மேலும் மேலும் கொடுமைப்பட வைக்காதீர்—கோல் முறியும் அளவுக்கு அடக்குமுறைச் சுமையை ஏற்றிக் கொள்ளாதீர். இலட்சியத்துக்காக மனத்தூய்மையுடன் அறப்போரில் ஈடுபட்டுள்ள எம்மை அடக்குமுறைகொண்டு அழித்துவிட முடியாது—பிணங்களைக் காணவிருப்பமா — சாகத்தயாராக இருக்கிறோம்—ஆனால் உயிரோடு இருக்கும் வரையில் எமது உள்ளத்தில் சரியெனப் பட்டதை உரைத்தபடிதான் இருப்போம். அதற்காக உழைத்தபடிதான் இருப்போம், உள்ள உயிர் ஒன்றுதான்—அது பிரிவதும் ஒருமுறைதான் — பிரியப்போவதும் உறுதிதான் — அடக்கு முறை ஆட்சியே, அது உன் துப்பாக்கி முனையால் பிரிந்தால் என்ன, தானுக் காலத்தால் துளைக்கப்பட்டுப் பிரிந்தால் என்ன—இரண்டுக்குமிடையே வித்தியாசம் அதிகம் இல்லை—உயிரைக் கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தால், தாராளமாகச் செய்துகொள்—ஆனால் மாண்டவர் போக மீதமுள்ளவர்கள் திராவிடத்தை மீட்டே தீருவார்கள்—அதை மறவாதே—வீழ்ந்த வீரர்களின் புதைகுழி, எதிகாலத்தில் திராவிடப் பெருங்குடி மக்களின் புனிதஸ்தலமாகப் போகிறது—அதையும் மறவாதே!

திராவிடத்தோழர்களே! முன்னேற்றக்கழகத்தினரே! துரைத்தனத்தார் துணிந்துவிட்டனர் — நாமும் தயாராகத்தான் வேண்டும். அறப்போர் புரிகிறோம், பலாத்காரமற்ற போர்—முறையும் நெறியும் தவறாத போர்—இதிலே எக்காரணம் கொண்டும் மாசு புகலாகாது—ஆம் — தூசியும் புகலாகாது. ஆத்திரம், அறிவிழத்தல், அடக்கமின்மை, பதைப்பு, திகைப்பு, திடீர்ச் செயல்—இவை ஏதும் கூடாது. கடுஞ் சொற்களை எப்போதும் எவர்மீதும் வீசலாகாது—எவ்வளவு இழித்தும் பழித்தும் எவர் பேசியபோதிலும். எவ்வளவு மூர்க்கத்தனமான தாக்குதலில் துரைத்தனத்தார் ஈடுபட்டாலும், அடிபடத் தயாராக இருக்கவேண்டுமேயொழிய, சிறு விரல் கொண்டும் திருப்பித் தாக்கும் பேதமை இருத்தலாகாது. கட்டுப்பாடும் கண்ணியமும்தான் நமக்குக் கவசம். இதைக் கெடுப்பவர்கள், தெரிந்தோ தெரியாமலோ திராவிடத்தைக் கெடுப்பவராவர். நெருக்கடியான நேரத்திலே ஒரு சிறு கல்லை எடுத்து வீசுவதும், பெரியதோர் வீரம் என்று கருதும் 'அவசரக்காரர்கள்' முளைத்தால், முளையிலேயே கிள்ளி எறியுங்கள். அவ்வித சிறு செயலில் ஈடுபடுபவர் எவரும், அறப்போர்க்களத்திலே இருக்கும் தகுதி உடையவராகார். அப்படிப்பட்டவர்களைக் கண்டால், உடனே அவர்களைப்பற்றிக் குறிப்பெடுத்து, எனக்கு எழுதுங்கள்—தவறவேண்டாம்—அவர்கள் மகத்தானதோர் இயக்கத்திலே இருக்கும் மாண்புடையவர்களல்ல என்று கூறுவதுமட்டுமல்ல, நமது கழகத்தை விட்டே அவர்களை விலக்கவும் செய்வேன். ஒரு கல், அத்தகையவர்களால் வீசப்பட்டால், அறப்போர் வீரர் மார்பின்மீது, அடக்குமுறைக்காரர்களைக்கொண்டு குண்டு வீசச் செய்யும் கொடிய துரோகச் செயல்புரிந்தவராவர்.

நமக்கு அடக்குமுறையின் கோரத் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் சக்தி வளரவேண்டும்.

24—26—இரண்டு நாட்களும், அதற்கான 'பாடம்' படித்தோம்—பாடம், நிச்சயம் பலன் தரும்.

—✱—

காட்டில்

4—11—50 டில்லி மந்திரி சென்னை வருகிறார்!

டில்லி ஆதிபத்யத்தின் அங்கம்!

★

வடநாட்டாட்சியின் பிம்பம்!

★

வாட்டிடும் வடநாட்டின் தூதுவர்!

★

காட்ட வாரீர், கருப்புக் கொடி!

நேரம்:- மாலை 4-மணி

இடம்:- மெமோரியல் ஹால் (பார்க் டவுன்)

எல்லோரும் காட்டுவோம் கருப்புக் கொடி!!

1-ம் பக்கத் தொடர்ச்சி

சிந்திக்கவும் நேரமின்றி கையில் கிடைப்பதையெல்லாம் வாரிவீசுவான்.

காங்கிரஸ் சர்க்கார் கையில் அகப்பட்ட ஆயுதங்களை எடுத்து வீசுகின்றனர்—வீசட்டும் கை ஓய்கிற வரை, பிறகு சாயட்டும் என்று எண்ணிச்சிரிப்பர். அணையும் விளக்கின் கடைசி ஜோதி சற்று அதிகப் பிரகாசமாகத்தானிருக்கும். அப்படித்தான் படிப்படியாக அடக்குமுறைகளை பெரிதாக்கிக் கொண்டேவந்துவிட்டனர். கூட்டங்களுக்குத் தடை, ஊர்வலங்கள் கூடாது, கொடியேற்றம் ஆகாது, நூல்களுக்குத் தடை, நூலாசிரியர்கள், புத்தகம் வெளியிட்டோர் மீது வழக்கு, நாடகங்களுக்கு தடை, சிறைவாசம், தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம் வரை வந்துவிட்டனர். இனியும் ஏதேனும் 'மிச்சம் மீதி' இருந்தாலும் எடுத்து வீசட்டும்!

குன்றத்தூரில் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளை நம் கண் முன்னால் கொண்டுவந்தால் நெஞ்சு கொதிக்கிறது!

பேச வந்தவர்கள், கொடியெடுத்துச் சென்றவர்கள், துண்டறிக்கைகள் வெளியிட்டவர்கள், சுவரொட்டிகள் ஒட்டியவர்கள், கூட்டங் கூட்ட முயற்சித்தவர்கள்—எல்லோரையும் அடித்து நொருக்கினர்.

அன்று அங்கு, தலையிழந்த சார்லஸ் மன்னனின் குரலை கேட்டனர். பிரஞ்சு லூயியின் உருவத்தைப் பார்த்தனர். ருஷ்ய ஜாரின் ஆவி உலவிற்று. இட்லரின் சாயல் தெரிந்தது. இத்தாலிய முசோலினியின் சிரிப்பு கேட்டது-குன்றத்தூரில் ஆணவ ஆர்ப்பாட்டம் உச்சநிலைக்கு போய்விட்டது!

ஆனவர்தாமே, இதை மட்டும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! அறப்போரில் குதித்துள்ள அவர்கள் அத்தனைப் பேரும் பயணம் சொல்லிக்கொண்டு கிளம்பிவிட்ட பட்டாளம்—மரண சாசனம் எழுதிவைத்துவிட்டுப் புறப்பட்டுள்ள பரிவாரம் சேனை—உயிர் பெரிதல்ல, மானந்தான் பெரிது என்று கூறிடும் போரணி வகுப்பு—ஆகவே துப்பாக்கி முனையை நீட்டி, அவர்களின் தூய இலட்சியத்திலிருந்து பிரித்துவிட முடியாது! குண்டுகள் பாயப் பாய, இன்னும் அதிகமாக மக்கள் திரண்டு நிற்பர்.

'குன்றத்தூர்' அவர்களின் உணர்ச்சியை குன்றிடச் செய்யவில்லை—ஊக்கத்தை பொன்றிடச் செய்யவில்லை—'குன்றத்தூரால்' அவர்கள் உள்ளத்திலே ஒளிவிடும் இலட்சியங்கள் அகன்றுவிடாது—மேலும் அதிக வலுவாக வளரும்! இதனை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்!

குன்றத்தூர் கொடுமைக்கு இலக்காகி, அகிம்சா ஆட்சியினரால், கைதுசெய்யப்பட்டு அடக்குமுறைக்கு ஆளானோர்:—

என். வி. நடராசன்	முனுசாமி
பாலசுந்தரம்	பக்கிரி
மாங்காடு கண்ணப்பனார்	தாமோதரன்
தாங்கோணி	சுப்பராயலு
சி. திராவிடமணி	முத்து
வரதன்	ராஜவேலு
டி. கே. சிவகுமாரன்	காஞ்சி சபாபதி
என். திருநாவுக்கரசு	,, பாலகிருஷ்ணன்
வேலாயுதம்	,, ஏழுமலை
சுப்பிரமணியம்	—?—

கைதான 20-தோழர்களில் தோழர்கள், என். வி. நடராசன், பாலசுந்தரம் ஆகியோர் பூந்தமல்லி சப்-ஜெயிலில் கிடக்கின்றனர்.

ஏனைய தோழர்கள் சைதாப்பேட்டை சப் ஜெயிலுக்கு கொண்டு செல்லப்பட்டனர்

குண்டுக்கு இரையானோர்:

குண்டடி பட்டு படுகாயமடைந்த மூவரில் கீழ்க்கண்ட இரு தோழர்களும் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றனர்,

பச்சையப்பன் சாமிநாதன்

✲

சென்னை கழக நிதி
'ஓர் இரவு' மூலம் ரூ 3139
கே. ஆர். ஆர்—குழுவினர் பணி

சென்னையில் நடந்த 19—10—50 முதல் 22—10—50 வரை நான்கு நாட்கள், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும், அவர்தம் குழுவினரும், சி. என். ஏ தீட்டி நடமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் "ஓர் இரவு" நாடகத்தை நடத்தினர்.

நான்கு நாட்களும், ஒற்றைவாடை தியேட்டரில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

முதல் நாளும், இரண்டாவது நாளும் வசூலாகிய மொத்தத் தொகையில் செலவு போக மீதித் தொகையை கே. ஆர். ராமசாமி, சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கென அளித்தார்.

செலவு போக மீந்த ரூ 3,139ஐயும், சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் கோவிந்தசாமியிடம் அளித்து, "மாவட்டத்துக்கென ஒரு ஒலிபெருக்கி வாங்கி கழகப் பிரச்சாரத்துக்குப் பயன் படுத்திக்கொள்ளவும், அது போக எஞ்சிய தொகையைக் கழகப் பணிகளுக்குப் பயன் படுத்திக்கொள்ளவும், வேண்டுமென சென்னை மாவட்டத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று தோழர் கே. ஆர். ராமசாமி கேட்டுக் கொண்டார்.

நெடு நாட்களாகத் தாங்கள் கொண்டிருந்த ஆசையை நிறைவேற்றித் தரும் வகையில் ஆதரவு தந்து, நாடகமாடி நன்கொடை ஈந்த நடிப்புப் புலவருக்கும் ஏனைய நடிகமணிகளுக்கும் செயலாளர் கோவிந்தசாமி, சென்னையின் சார்பில் தமது மகிழ்ச்சி கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்:

நாடகத்தின் கடைசி நாளன்று பிரபல எழுத்தாளரும், ஏ வி. எம். ஸ்டுடியோவின் மூலம் திரைப்பட உலகில் பணியாற்றி வருபவரும், "ஓர் இரவு" படத்தின் டைரக்டருமான தோழர் ப. நீலகண்டன் தலைமை வகித்து, நாடக உலகினைப் பற்றியும் கலைச் சேவையைப் பற்றியும் அரியதொரு சொற்பொழிவாற்றினர்.

(நிருபர்)

✲

கழகத் தோழர்களுக்கு!

—✲—

நமது கழகக் கூட்டங்கள் நடத்தப் படக் கூடாதென 144 தடையுத்தரவு, எந்தெந்த ஊர்களில் போடப்பட்டிருக்கிறது என்பதை உடனடியாக இங்கு, தகவல் தெரிவிக்குமாறு கழகத் தோழர்களை வேண்டுகிறோம். இந் விபரம் அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகிறது.

ஆசிரியர்,
'திராவிட நாடு'
காஞ்சிபுரம்.

'காஞ்சியில் மறியல்

—✲—

1—11—50 அன்று திராவிடர் கழகத் தொண்டர்களான தோழர்கள் கோ. சண்முகம், கோ. பாலு, எஸ். கிருட்டினன் ஆகியோர், ஆடிசன் பேட்டையிலுள்ள வடநாட்டார் கடை முன், தலைமைக் கழக முடிவுப்படி அடையாள மறியல் செய்தனர். உரிமை வேட்கைகொண்ட அச்செயல் வீரர்களை, அகிம்சா ஆட்சி' கைது செய்தது.

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram'